Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

யாழ்ப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 17 வெள்ளிக்கிழமை (31.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 243

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2486)







வியாழ மாற்றம்
உங்களுக்கு எப்படி?


13




# இடம்பெயர்ந்த மக்களுக்கு விசேட வாக்காளர் இடாப்பு

## வருகிறது புதிய சட்டம்

இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்காக புதிய வாக்காளர் இடாப்பு ஒன்று தயாரிக்கப்படவுள்ளது. இந்த புதிய வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் வடக்கு தேர்தல்களில் வாக்களிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வாக்களிக்க வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில், தேர்தல் சட்ட மூலத்தில் அரசாங்கம் மாற்றங்களை செய்யவுள்ளது. அதன்படி 1980 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க தேர்தல் வாக்காளர் பதிவு சட்ட மூலம் சீர்த்திருத்தப்பட்டு, புதிய சட்ட மூலம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்த சட்ட மூலம் எதிர்வரும் யூன் மாதம் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில், வாக்காளர் பெயர் பட்டியலில் இடம்பெறாதவர்களுக்கு, மேலதிக வாக்காளர் பெயர் பட்டியல் ஒன்றின் மூலம் வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

## தாய்லாந்து பிரதமர் இன்று கொழும்பில்

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் இன்க்லக் சித்தவாத்ர இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவிருக்கிறார்.

காலை கொழும்பை வந்தடையும் தாய்லாந்து பிரதமர், முற்பகல் 11.00மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவு குறித்து கலந்துரையாடவிருக்கிறார்.

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பிரதமர், பிற்பகல் 2.45

19 ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்க வெளியுறவு அமைச்சருக்கு அமைச்சர் டக்ளஸ் கடிதம்

## குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்க வெளியுறவு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள மனித உரிமைகள் அறிக்கை - 2012 இல் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி குறித்து முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் அற்றவை என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் ஹெரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற தகவல்களின் நம்பிக்கைத் தன்மை குறித்து கேள்விகள் எழுப்பியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதில் ஏராளமான தவறுகள் உள்ளன

19 ஆம் பக்கம் பார்க்க

# ஜயலத் ஜெயவர்த்தன நேற்றுக் காலமானார்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன காலமானார். சிங்கப்பூர் மருத்துவ மனையில் நேற்றுக் காலை ஜயலத் ஜயவர்த்தன காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறக்கும் போது அவருக்கு வயது 60 என்பது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஜா- எல தொகுதி அமைப்பாளராக இருந்த அவர் 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய புலனாய்வுப் பணிப்பாளர் வன்னியில் கள ஆய்வு



வவுனியா விமானப்படைத் தளத்தில் நேற்று சிறப்பு விமானம் மூலம் வந்திறங்கிய இந்திய புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் லெப். ஜெனரல் ஆர்.என்.சிங்கை வன்னிப் படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா வரவேற்றார். அதன் பின்னர், வன்னிப் படைகளின் தலைமையகத்தில் இந்திய இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினருக்கும், வன்னிப் படைத் தலைமையக உயரதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

# டில்லி மாநாட்டில் பங்கேற்க கூட்டமைப்பு தயக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து ஆராயும் முகமாக அடுத்த மாதம் புதுடில்லியில் நடத்தப்படவுள்ள மாநாட்டில் கூட்டமைப்பு இம்முறை பங்குபற்றுவதா இல்லையா என்று இன்னமும் முடிவு செய்யவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த வருடம் டில்லியில் இவ்வாறு நடத்தப்பட்ட மாநாட்டின்போது மிக முக்கிய அதிதிகளாக கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டிருந்தனர்.

அப்போது இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதுவும் கைவசம் இல்லாமையால் கூட்டமைப்பு சங்கடத்தில் சிக்கிக் கொண்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

# ஆசிரியருக்கு இடமாற்றம்; ஊர் திரண்டு போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்குத்தொடுவாயில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை இடமாற்றம் செய்யும் நடவடிக்கையைக் கண்டித்து இப்பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று ஆர்ப்பாட்டத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

# காணி சுவீகரிப்பு வழக்கு; விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கில் மக்களுக்கு சொந்தமான 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணி அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு மனுக்களின் பிரதிவாதிகளை யூலை 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நேற்று அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரத்தின் மூன்றில் இரண்டு பகுதிக்கு ஒப்பான

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளே...

தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்



# யுத்தத்துக்கு பிந்திய நல்லிணக்கம்; பொது அமைப்புக்களுடன் ஆராய்வு

வடமராட்சி தெற்கு, மேற்கு, கரவெட்டி பிரதேச செயலகத்தினால் பிரதேச நல்லிணக்கம் தொடர்பான மக்களுடனான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் நல்லிணக்க ஆலோசகரான பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க கலந்துகொண்டு மக்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மக்களின் குறைபாடுகளை எடுத்துக் கூறினர். இதன்போது கரவெட்டி பிரதேசத்தில் 98 சனசமூக நிலையங்கள் இயங்கிவருகின்றன. இந்நிலையில் இச்சன சமூக நிலையங்களுக்கு 2 வருடகாலங்களாக நன்கொடை எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் சனசமூக நிலையங்கள் இயங்கமுடியாத நிலையில் செயற்பாடுகள் முடங்கிக் காணப்படுகிறன.

மேலும் இந்நன்கொடை தொடர்பில் உள்ளூராட்சித் திணைக்களத்தையும், பிரதேச சபையினையும் கோட்டால் அரசாங்கத்தால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என கூறப்படுகிறது. எனினும் பிரதேச சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் சீராக இடம்பெறுவதற்கு நன்கொடை வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார். (18)

## அறிவித்தல்

### வேலணை பிரதேச சபை

### நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர் திருவிழா - 2013

01. நாயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழாவானது 09.06.2013 தொடக்கம் 24.06.2013 வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக்காலப்பகுதியி ஆலய வீதியிலும், வெளிச்சுற்றாடலிலும், புங்குடுதீவு, குறிகட்டுவான் பகுதியிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வோர் வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு வியாபார அனுமதிப்பத்திரம் பெற்று பிரதேச சபையின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும். அனுமதிப்பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

02. உயர் திருவிழாக்காலத்தில் நயினாதீவில் காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரையும் பின்னர் பிற்பகல் 4.30 மணி முதல் இரவு 11 மணி வரையும் பிரதான வீதியிலும், யாத்திரிகர் மடத்திற்கு அப்பாலும் ஆலயத்தின் தெற்கு மதிலுக்கு அருகிலுள்ள வீதியிலும், மேற்கு மதில் எல்லைக்குள்ளும் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் உட்செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

03. குறிகட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உப அலுவலகத்தினால் வாகனத்தரிப்பிட வசதிகள், சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள் தற்காலிக இளைப்பாறு மண்டப வசதிகள், மின்சார வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால் பணிக்கப்படும் ஒழுங்கு முறைகளைப் பேணுமாறு யாத்திரிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

04. வாகனத்தரிப்பிடங்களில் உரிய தரிப்பிடக் கட்டணங்களைச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு வாகன உரிமையாளர்கள் கேட்டக்கொள்ளப்படுகின்றனர்.

05. இக்காலப்பகுதியில் ஆலயச் சுற்றாடலின் வெளிப்புறங்களில் வியாபாரம் நடத்துவோர் வேலணை பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 04.06.2013 ஆம் திகதி காலை 11 மணிக்கு நயினை ஸ்ரீ நாகபூசணி ஆலய நூலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு சமூகமளிக்க வேண்டும். அன்றைய தினமே தங்களுக்கான அனுமதிப்பத்திரம் சபையால் வழங்கப்படும். பின்னர் எக்காரணம் கொண்டும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

06. பொது மக்களின் அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

சின்னையா சிவராசா
தவிசாளர்
பிரதேச சபை
வேலணை.

30.05.2013

(C/2805)

## பரிசளிப்பு விழா

(ஊர்கவற்றுறை)

தேசிய பொது நூலக வாரத்தினையும், உலக புத்தக தினத்தையும் முன்னிட்டு ஊர்காவற்றுறை பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (65)

## அன்னம்மாள் தேவாலயம் திறப்பு

(முழங்காவில்)

பூநகரி வலைப்பாட்டு இறங்குதுறைக்கு அருகாமையில் புதிதாக அமைக்கப்பட்ட பிரமாண்டமான புனித அன்னம்மாள் தேவாலயம் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இவ்வாலயம் மக்களின் பங்களிப்பில் 4 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (112)

## நிர்வாகத்தெரிவு

(கைதடி)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அபிவிருத்திச் சபை கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது. (80)

## கூட்டம்

(கைதடி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இரண்டாவது செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

கல்லூரி அலுவலகத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் என அதிபர் அ.கைலாசம்பிள்ளை அறிவித்துள்ளார். (80)

## எரிகாயங்களுக்கு இலக்கான பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்கு இலக்காகிய இளம் தாயொருவர் நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அரியாலை நாவலடியைச் சேர்ந்த தர்சன் காயத்திரி (வயது - 20) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அவரது வீட்டில் நடைபெற்ற தீ சம்பவம் ஒன்றில் எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரத்தகவல்கள் தெரிவித்தன.

குறித்த பெண்ணின் கணவர் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே மத்திய கிழக்கு நாடு ஒன்றிற்கு வேலைக்குச் சென்று திரும்பியிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (பா)

## கேள்வி அறிவித்தல்

**ஊர்காவற்றுறை பிரதேச சபை-ஊர்காவற்றுறை**
**குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) - உள்ளூராட்சி திணைக்களம், வடமாகாணம்.**

ஊர்காவற்றுறை - சென்.ஜேம்ஸ் இணைப்பு வீதி புனரமைப்பு
ஒப்பந்த இலக்கம் : NP/14/41(9)/2/PSDG/2013/1

1. தலைவர், பெறுகைக் குழு, ஊர்காவற்றுறை பிரதேசசபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு வேலைக்காக கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) வீதி புனரமைப்பிற்கு C 7 தரத்தினை அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் [illegible] இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை. (தொலைபேசி: 021 321 2398) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை 13.06.2013 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியை செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை (தொலைபேசி இல : 0213212398) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 31.05.2013 முதல் 13.06.2013 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா 1500.00 + தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT – 2% ) இனை கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 14.06.2013 ம் திகதியன்று 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் 14.06.2013 ஆம் திகதியன்று 14.00 மணிக்கு திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் ஊர்காவற்றுறை பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 07.06.2013 அன்று காலை 10.30 மணிக்கு நடைபெறும்.இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப் படும் காலம். |
| NP/14/41(9)/2/PSDG/2013/1 | ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் இணைப்பு வீதி புனரமைப்பு | 5,421,472.60 | 03 மாதங்கள் | C7 அல்லது அதற்கு மேல் (வீதி) | 54,000.00 | 14.09.2013 வரை |

31.05.2013 (C/2804)

ம.ஜெயகாந்தன், தலைவர்,
பெறுகைக் குழு, ஊர்காவற்றுறை பிரதேசசபை.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2430 திகதி 29-05-2013

ஆங்கில எழுத்து: A

வெற்றி எண்கள்: 13 15 32 34

போனஸ் இல: 43

ஜக்பொட் பரிசு ரூ. 35,416,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 257581 | 20/- | 5,151,620/- |
| 2 இல | 18388 | 100/- | 1,838,800/- |
| 3 இல | 395 | 1,000/- | 395,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10313 | 40/- | 412,520/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 737 | 1,000/- | 737,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 35,416,050/- | - |
| 1 இல + போனஸ் இல | 12353 | 100/- | 1,235,300/- |
| 2 இல + போனஸ் இல | 577 | 500/- | 288,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 499 | 200/- | 99,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 36 | 1,500/- | 54,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 300899 | | 12,932,540/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஜுன் 01 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 36,119,025/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொ.பே: 2333546/7

(C/2803)

# கல்வியின் மூலமே பெண்கள் முன்னேற்றத்தை எட்ட முடியும்

## தமிழ்நாட்டு அறிஞர் த.இராமலிங்கம்

பெண்களின் உணர்வுகளை ஆண்கள் புரிந்துகொள்ளத் தவறுவதனால்தான் குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நலல குடும்ப அமைப்பும், சிறந்த சமூகம் உருவாவதற்கு ஆண்கள், பெண்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு வாழவேண்டும் என தமிழ்நாட்டு அறிஞர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடாத்திய கம்பன்விழா இரண்டாம் நாள் காலை நிகழ்வில் உரை அரங்குக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலக்கியச் சுடர் இராமலிங்கம் தொடர்ந்து பேசுகையில்,

பெண்மையைப் புரிந்து கொளவது தொடர்பான பிரச்சினை உலகம் முழுவதும் சிக்கலான விடயமாகவே புார்க்கப்படுகிறது. பாரதியும், பாரதிதாசனும், பெண விடுதலைக்காகப் பாடுபட்ட கவிஞர்களாவர்.

கம்பனுடைய இராமாயணத்தைப் படிப்பதன் மூலமே பெண்மையைப் புரிந்துகொள்ள முடியும். கல்வி ஒன்று தான் பெண்களிடையே மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் கொண்டு வரத்தக்கது.

எனவே பெண்கள் இடையறாது கற்கவேண்டும். தாம் கற்ற கல்வியினால் வீட்டையும், நாட்டையும் சிறக்க வைக்க வேண்டும். வீட்டுக்கு வரக்கூடிய பெண் எல்லா விடயங்களிலும் சிறந்தவளாக இருந்தால் வீடு சிறக்கும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்துகொணடு வாழவேண்டும். பெண்களின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். ஆண்கள் பெண்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு நடக்கவேண்டும்.

விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஆணுக்கும் வேண்டும். பெண்ணுக்கும் வேண்டும். வீட்டில் ஆண், பெண் இருவருமே ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுத்து வாழப்பழகினால் வீடும், நாடும் சிறந்து விளங்கும் என்றார். (10)

# உண்டியல் திருட்டைத் தடுக்க கோவில் நிர்வாகம் புதுவழி

(வேலணை)

யாழ்ப்பாணத்தில் உள்ள அதிகமான ஆலயங்களில் உண்டியல் மற்றும் பெறுமதி மிக்க பொருட்கள் திருடப்பட்டு வருவது அதிகரித்துள்ளது.

இவ்வாறு அதிகரித்து வருகின்ற சில திருட்டுகளில் சிலவற்றினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஆலயத்தின் நிர்வாகிகள் ஆலோசனைகளுக்கு ஏற்ப ஆலயத்தின் முன்பாகவும் வேறு ஆலய சூழல்களில் வைக்கப்பட்டிருக்கின்ற உண்டியல் களினது பூட்டுகளை இரவில் திறந்துவிட்டு மறுநாள் காலையில் (பகல்) உண்டியலில் பூட்டை பூட்டிவிட்டு அன்றைய தினம் மாலையோ, அன்றி இரவிலோ உண்டியலில் சேருகின்ற பணங்களை எடுத்துக்கொண்டு உண்டியல்களை திறந்து விடுவதும் இதன்படி நாளாந்தம் செய்யவேண்டும்.

இதன் மூலம் உண்டியலில் சேருகின்ற பணமானது ஆலயத்திற்கு சேருவதுடன், உண்டியல், அதன் மேல் பூட்டப்பட்டு வருகின்ற பூட்டுக்கள் என்பன சேதமடையாமல் பாதுகாத்துக் கொள்ளத்தக்கதாக அமைவதாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்தில் சில ஆலயங்களில் நடைபெற்று வருவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. (05)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 328 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நாளை சனிக்கிழமை நியமனம் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் நடைபெபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

மேலும் ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் மற்றும் சமுர்த்தி அதிகார சபைப் பணிப்பாளர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (பா)

# காலாவதியான பொருட்களை விற்ற 26 வர்த்தகர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்கள் மற்றும் விலைப்பட்டியல் இன்றி பொருட்கள் விற்பனை செய்த 26 வர்த்தகர்களுக்கு யாழ். நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளதாக பாவனையாளர்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி என். சிவசீலன் தெரிவித்தார்.

யாழ். நகரப் பகுதியில் குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி, நாவலர் வீதி, காங்கேசன்துறை வீதி, திருநெல்வேலி பகுதியில் காலாவதியான பொருட்கள் விற்பனை செய்த வர்த்தக நிலையங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை பரிசீலனை மேற்கொண்டவேளை, 30 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வேளை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 17 வர்த்தகர்களுக்கு தலா 1000, 17,000 ரூபாவும், காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 7 வர்த்தகர்களுக்கு 10 ஆயிரம் ரூபா படி 70 ஆயிரம் ரூபாவும், பொதி செய்யப்பட்ட பொருட்களுக்கு உற்பத்தி மற்றும் காலாவதியாகும் திகதி குறிப்பிடப்படாத வர்த்தகர்கள் இருவருக்கு தலா 2500 ரூபா வீதம் 5000 ரூபூாவும் அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், நீதிமன்றிற்கு சமூகமளிக்காத நான்கு வர்த்தகர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

பொலிஸாரின் தீவிர கண்காணிப்பால்

# கீரிமலையில் இல்லாதொழிந்த அத்துமீறிய அசௌகரியங்கள்

(கீரிமலை)

பொலிஸாரின் தீவிர செயற்பாட்டை அடுத்து கீரிமலை புனித பிரதேசத்தில் இடம்பெற்று வந்த கலாசார சீர்கேடுகள் முற்றாக நீங்கியுள்ளமை குறித்து அங்கு செல்லும் பல்வேறு தரப்பினரும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக கீரிமலை கடற்கரையோரப் பகுதிகளில் காதல் ஜோடிகளின் அத்துமீறிய செயற்பாடு, மதுப்பிரியர்களின் அட்டகாசம் ஆகியவற்றால் அப்பகுதி புனிதப் பிரதேசம் தனது சுயதன்மையை இழந்து வந்ததுடன், பிதிர்க் கடன்களை நிறைவேற்றச் செல்வோரும், நகுலேஸ்வரத்தானை தரிசிக்கச் செல்வோரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக "தினமுரசு" சுட்டிக்காட்டியிருந்தது. இந்த நிலையில் நகுலேஸ்வரத்திலுள்ள பொலிஸார் கடற்கரையோரப் பகுதிகளில் தற்போது தமது தீவிர கண்காணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

அண்மையில் மது அருந்திய நிலையில் கேணிக்குள் குளித்துக் கொண்டிருந்த இருவர் பொலிஸாரினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு பொலிஸாரின் தீவிர கண்காணிப்பினால் அப்பகுதியில் கலாசார சீரழிவுகள் குறைந்துள்ளமை குறித்து அங்கு செல்வோர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

# வலி.தெற்கு பிரதேசசபைப் பகுதியில் சமாசம் இன்றி சனசமூக நிலையங்கள்

(உடுவில்)

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான சமாசம் கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக இயங்காமல் எவ்வித செயற்பாடுகளுமின்றி உள்ளதாக சனசமூக நிர்வாகிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலி. தெற்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் 29 சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் கூட்டிணையான சமாசம் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற போதிலும், இன்றுவரை எவ்வித செயற்பாடுகளுமின்றி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனசமூக நிலையங்களின் நாளாந்த செயற்பாடு, அவற்றின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் செயறபாடுகள் தொடர்பான கலந்துரையாடல்கள் என்பன இந்த சமாசத்தின் மூலமாகவே முன்னெடுக்கப்படுகின்றன.


ஆனால் குறித்த சமாசம் இயங்காமல் உள்ளதனால் தமது செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல முடியாமல் உள்ளதாக சனசமூக நிலைய நிர்வாகிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


எனவே, சமாசத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இஞ்சிக்கு கிராக்கி

(கொடிகாமம்)

கொடிகாமம் பொதுச்சந்தையில் தற்போது இஞ்சிக்கிழங்குக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. தற்போது சந்தையில் 100g இஞ்சிக்கிழங்கு 70 ரூபா முதல் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. (150)





வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கான கட்டட நிதியில் கட்டப்பட்ட அராலி வள்ளி அம்மை வித்தியாசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கில்ரன் விடுதி உரிமையாளர் திருக்குமரன் நடேசன் கட்டடத்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வதையும், பாடசாலை சமூகத்தால் விருந்தினர் கௌரவிக்கப்படுவதையும், கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம். (180)

உண்மையை எல்லாம் சொல்ல வேண்டியதில்லை. சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கட்டும். -பொன்மொழி.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## நம்மை அடிமையாக்கும் அகங்காரம்!

நடக்க முடியாக் கனவுகளையே தொடர்ந்தும் நம்பிக் காத்திருப்பது கூட, நமக்குக் கிடைக்கக் கூடியதையும் கிடைக்க விடாமல் செய்துகொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். யதார்த்தத்தைப் புறக்கணித்துவிட்டு, நாம் நினைப்பதே நமக்குக் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பானது, நம்மை முன்பிருந்த நிலைகளைவிட மேலும் மேலும் பின்தள்ளி வருகிறது என்பதை விளங்க வேண்டும்.

நம்மிடமிருப்பது ஒருவகை அகங்காரமே. நாம் நினைப்பது நடக்க வேண்டும். அல்லது எத்தகைய துயர்களையும் நம்மேல் ஏற்றிக்கொள்வோம் என்கிற ஆவேசமானது, நாம் முற்றிலும் சரியானவர்கள் என்று நினைத்துக்கொள்ளும் அகம்பாவத்திலிருந்து வருவதே. முதலில் எதிராளி நம்மைவிடப் பலமானவன் என்பதை இது ஏற்றுக்கொள்ள விடுவதில்லை.

ரோசத்தைத் தன் அரிதாரமாகப் பூசிக்கொள்கிறது. எதிராளி பலமாக இருந்தால், அவர்களுடன் பேசித்தான் பாதிக்கப்பட்டவர்கள் தங்களது உரிமைகளையும் தேவைகளையும் வென்றெடுக்கமுடியும் என்ற பாலபாட அறிவைக்கூட அது புறக்கணிக்கிறது. இதன்விளைவாக இணக்க அரசியல் குறித்து சிந்தித்து ஆக்கபூர்வமாக செயல்படுபவர்களை ஏளனப்படுத்தியபடி தன்னைப் புதைகுழிக்குள் மேலும் மேலும் அமிழ்த்திக் கொள்கிறது.

இவ்வகையான அகங்காரம் ஒட்டுமொத்த சமூகத்தையும் ஆக்கிரமித்திருக்கும்போது, மற்றவர்களுடன் இணக்கம் காணவும் பேசவும் அது தடையாக நிற்கிறது. இத்தகைய உயர் நினைப்புகள் நம்மை உய்ய விடப்போவதில்லை. எதார்த்தத்தை உணர்ந்தவர்கள் கூட மற்றவர்களுக்காகத் தங்களிடமுள்ள உண்மையை மறைத்துக் கொள்கிறார்கள். சமூகத்தின் பிரதான ஓட்டத்தை மறுக்கவோ மாற்றவோ விரும்பாமல் போலியாக ஒத்தோடுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசி இங்கு இணக்கத்தைக் காண்பதற்கு முடியாது என்பதை முடிந்த முடிவாக்கி வைத்திருப்பது, நம் துன்பத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தால் வேறு யாராவது வந்து தலையிடுவார்கள் என்று காத்திருப்பது, பழைய பெருமைகளில் திளைத்திருப்பது எல்லாமே நம்மிடமுள்ள அகங்காரத்தின் பிரதிபலிப்புகள்தான். ஓஷோ ஒரு ஜென் கதை மூலம் இவ்வகை குணவிநோதத்தைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஒருநாள் ஒரு ஜென் குரு பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தார். அவ்வழியால் ஓடிவந்து கொண்டிருந்த ஒருவன் அவரை இடித்துக் கீழே தள்ளிவிட்டு ஓடினான். தடுமாறி விழுந்த குரு மெதுவாக எழுந்து, ஒன்றுமே நடவாதது போல் திரும்பியும் பார்க்காமல் தொடர்ந்து நடந்தார். இதைப் பார்த்த அவரது சீடன், “ஐயா, என்ன அக்கிரமம்! அவன் உங்களை அடித்துத் தள்ளிவிட்டுப் போகிறான். நீங்கள் ஒன்றும் சொல்லாமல் பேசாமல் வருகிறீர்களே!” என்றான்.

“அது அவன் தலைவலி” என்றார் குரு.

இந்த அகங்காரம் ஏதாவது ஒரு காரணத்தைத் தேடிக் கொண்டே இருக்கும். ஒருவரும் அதைச் சட்டை செய்யாமல் விட்டால் அதற்கு அகோர பசி வந்துவிடும். பிறர் கவனமே அதற்குத் தீனி.

நீ அழகாய் தோற்றமளிக்க விரும்புகிறாய்; நல்ல முறையில் நடந்துகொள்ள விழைகிறாய்; உன்னை அடிக்கடி மாற்றிக் கொள்கிறாய், சமயத்திற்கு ஏற்றவாறு பிறரைக் கவர உன்னை மாற்றிக் கொள்கிறாய். ஒருவிதத்தில் இது ஒரு ஆழமான யாசகம். பிறர் கவனத்தைச் சதா யாசிப்பவனை பிச்சைக்காரன் என்றுதானே கூறவேண்டும்.

அகங்காரம் ஒரு அடிமைத்தனம். பிறர் எண்ணங்களைச் சார்ந்துதானே அது நீடிக்கிறது. - ஆசிரியர்

# இலங்கையில் நிலவிய யுத்தம் கல்வித்துறையும் பொறுப்பு

## – அமைச்சர் பந்துல கூறுகிறார்

இலங்கையில் நிலவிய யுத்தத்திற்கு கல்வித்துறையும் பொறுப்பேற்க வேண்டும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

வடமத்திய மாகாணத்திலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் செயற்திட்டமொன்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அங்கு மேலும் தெரிவித்ததாவது,

எமது வாழ்நாளில் அநேகமான நாட்களில் இரும்புகள் மோதும் அருவருக்கத்தக்க சத்தம், ஒப்பாரி, இரத்தம், பிணமேடுகள் நிறைந்த நாட்டினையே நாம் கடந்த 30 வருடங்களாகக் கண்டோம். அதற்கு நாட்டின் கல்வித் துறையும் பொறுப்பேற்க வேண்டும் என நான் நம்புகிறேன்.

மனிதாபிமானமற்ற கல்வி, எதிர்காலத்தை வெற்றிகொள்ள முடியாத கல்வி, உலகிற்குப் பொருந்தாத கல்வி வழங்கப்பட்டதன் விளைவாகவே அந்தச் சூழல் ஏற்பட்டது எனத் தெரிவித்தார்.

# வடக்கில் விவசாயத்துறை மேம்பாடு இரண்டாயிரம் குளங்கள் புனரமைப்பு

வடமாகாணத்தில் விவசாயத்துறையை மேம்படுத்தும் வகையில் 2 ஆயிரம் குளங்களை புனரமைக்கவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எஸ் எம் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கிழக்கில் திருகோணமலை உள்ளிட்ட வடக்கிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அதற்கமைய இதற்கென விசேட அதிகாரிகள் குழுவொன்றை ஈடுபடுத்தவுள்ளதாகவும், பிரதியமைச்சர் குறிப்பிட்டுளளார்.

விவசாயத்துறையை மேம்படுத்தும் வகையில் 2 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதேவேளை ‘கமநெகும’, ‘திவிநெகும’ போன்ற திட்டங்களின் மூலம் பொருளாதார அபிவிருத்தியமைச்சு , நாடளாவிய ரீதியிலுள்ள 30 ஆயிரம் சிறிய நீர்ப்பாசன குளங்களை புனரமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாயத்துறையை மேம்படுத்தும் பொறுப்பு பொருளாதார அபிவிருத்தியமைச்சில் காணப்படுவதன் காரணமாக நாடளாவிய ரீதியில் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையிலுள்ள பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பு காரணமல்ல

## – கூறுகிறார் அனுரகுமாரதிஸநாயக்க

இலங்கையில் தோன்றியிருக்கும் பிரச்சினைகளுக்கு அரசியலமைப்பு பிரதான காரணம் அல்ல என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சில அரசியல் கட்சிகள் அரசியலமைப்பு தொடர்பில் மாறுபட்ட யோசனைகளை உள்ளடக்கிய நிலையில், சட்டமூலங்களை சமர்ப்பிப்பதனால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெலஉறுமய 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் தனியாள் உறுப்பினர் யோசனையொன்றை முன்வைத்துள்ளதாக அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்தார்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்து தீர்வுகளை முன்வைப்பதே இதன நோக்கம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்து செய்து அரச தலைவருக்கான 3 மாற்று முறைமைகளை அறிமுகப்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியலமைப்பு யோசனையொன்றை நேற்று முன்தினம் முன்வைத்துள்ளது.

எவ்வாறாயினும், அரசியலமைப்பு அன்றி, பொருளாதார முறைமையே மாறுபடவேண்டிய முக்கிய விடயம் என்று அனுரகுமார திஸநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# புனர்வாழ்வு பெற்றவர்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர்

## புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் , சமூகத்தில் சுதந்திரமாக எவ்வித பிரச்சினைகளும் இன்றி வாழ்ந்து வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடு தலைப்புலி உறுப்பினர்கள், இலங்கையில் வாழ முடியாமல் வெளிநாடுகளில் புகலிடம் பெற முயல்வதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை, அவர் முற்றாக நிராகரித்துள்ளார்.

புனர்வாழ்வு பெற்று, சமூகமயப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் நலன்குறித்து, புனர்வாழ்வு ஆணையாளர் அலுவலகம் தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருவதாகவும், எந்தவொரு உறுப்பினரும் தமகசு அநீதி இழைக்கப்பட்டதாக முறைபபாடுகளை முன்வைக்கவில்லையெனவும் அவர் குறிப்பிட்டார்.

படையினரிடம் சரணடைந்த 11 ஆயிரத்து 593 விடுதலைப்புலி உறுப்பினர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்டு, சமூக மயப்படுத்தப்பட்டுள்ளனர். சுமார் 350 பேர் மாத்திரமே சமூகமயப்படுத்துவதற்காக எஞ்சியுள்ளதாகவும், அவர்களுக்கு புனர்வாழ்வு பயிற்சிகள் வழங்கப்பட்டுவருவதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புனர்வாழ்வு பயிற்சி வழங்கப்படும் காலப்பகுதியில் சுயதொழில் ஊக்குவிப்பு அறிவுறுத்தல்களும், சமூகமயப்படுத்தப்பட்டதன் பின்னர் அவர்களுக்கான கடனுதவி, வீட்டுத் திட்டம் என்பன குறித்தும் அரசாங்கம் உதவியளித்து வருகிறது.

இந்நிலையில் 3 ஆயிரத்து 800 முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் சிவில் பாதுகாப்பு பிரிவில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுள்ளதோடு, தனியார் துறைகளிலும் தொழில்வாய்ப்புக்களை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பொருளாதார சமூக நலன் தொடர்பில் ஆராய கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் புனர்வாழ்வு ஆணையாளரின் உப அலுவலகமொன்று திறக்கப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகத்தில் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் பதிவாகவில்லையென புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

4 சதவீதத்திற்கும் குறைந்த வட்டியுடன், சுயதொழிலுக்காக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கடனுதவி வழங்கப்படுகிறது. இதுவரை சுமார் 2 ஆயிரம் பேருக்கு சுயதொழில் கடனுக்காக நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் நலனுக்காக செயற்படுகிறோம் என்று கூறியவாறு மக்கள் விரோத செயற்பாட்டிற்கு பல்வேறு வியாக்கியானங்களை சொல்லியபடி புலிகள் தங்களது கட்டாய ஆட்சேர்ப்பு, கட்டாய திருமண தடைச்சட்டம் என்பனவற்றை அமுல்படுத்தியது எந்த விதத்திலும் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. இவ்வாறு மக்கள் விரும்பாத மேலும் பல சட்டங்களையும், நடைமுறைகளையும் யுத்தம் முடிவிற்கு வருவதற்கு முன்னர் புலிகள் மேற்கொள்ளத் தவறவில்லை. அவற்றையும், தமிழ் ஊடகங்கள் இவை எல்லாவற்றையும் மறைத்துக்கொண்டு மக்களை கடைசி அழிவுகளை நோக்கிச் செல்ல உசார்படுத்தியவாறு இருந்தது எவ்வாறு என்பதையும் தொடர்ந்து பார்ப்போம்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 42

■ வே. அர்ச்சுணன்

உடனடியாகவே உசார் அடைந்த காங்கேசன்துறை கடற்படைக் கட்டளைப் பீடம் 12இற்கும் மேற்பட்ட டோறாப் படகுகளை பருத்தித்துறை துறைமுகப் பகுதியை அண்டி அனுப்பி வைக்கின்றது. இதனை அடுத்து நிலைமையை உணர்ந்து கொண்ட தரைப் படையினரும் உசார் அடைந்து விட்டனர். இதனால் கடற்கரும்புலிகளின் இந்தத் தாக்குதல் நடவடிக்கை படு தோல்வியை சந்திக்கிறது. இதனை அடுத்து இந்தத் தோல்வியின் பின்னணி என்ன? இந்த நடவடிக்கையை முன்கூட்டியே கடற்படையினர் எவ்வாறு அறிந்து கொண்டனர் என்பது தொடர்பில் ஆராய்ந்த கடற்புலிகள் மணல்காட்டுப் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரை கைது செய்து விசாரணைக்கென அழைத்துச் செல்கின்றனர்.

இவ்வாறு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டவரை விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினர் தங்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று அடம்பிடித்த போதும் கடற்புலிகள் அவரைத் தாங்களே விசாரிக்கப் போகிறோம் என்று கூறி விசாரித்து விட்டு விசாரணையின் முடிவில் கேணல் சூசையின் உத்தரவிற்கிணங்க குறித்த கிராம வாசிக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது.

இவ்வாறு மரண தண்டனை வழங்கிய விவகாரம் புலனாய்வுத் துறையினருக்கு சங்கடமாகவே இருந்தது. அதாவது குறித்த நபர் தொடர்பில் தாங்கள் விசாரணை நடத்தி பொட்டம்மானின் உத்தரவிற்கிணங்கவே மரண தண்டனை வழங்கியிருக்க வேண்டும் எனவும் தங்களது வேலையை கடற்புலிகள் பார்ப்பது எந்த விதத்திலும் நியாயமாக இருக்காது எனவும் புலனாய்வுத் துறையினர் விசனம் வெளியிட்டனர். இருந்த போதிலும் இந்த விவகாரம் பெரிய அளவில் எடுபடாமல் போனது. இதைவிட வேறு சில விடயங்களிலும் இத்தகைய பிடுங்குப்பாடுகள் கடற்புலிகளிற்கும், புலனாய்வுத் துறையினருக்கும் இடையே உருவாகி நீடிக்கத் தொடங்கியது. விசாரணை நடத்தித் தண்டனை வழங்குவது யார் என்கிற இந்தப் பிரச்சினை ஒரு பெரிய விவகாரமாக சர்ச்சையைக் கிளப்பத் தொடங்கியது.

இந்த விவகாரத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்று தீர்மானித்த புலிகளின் உயர் மட்டத்தினர், புலனாய்வுத் துறையினருக்குரிய சிறப்பு வேலைத்திட்டத்தில் வேறு பிரிவினர் தலையிடக் கூடாது என்ற முடிவை அறிவிக்கின்றனர். இந்தத் தீர்மானம் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும் என்ற முடிவும் எடுக்கப்படுகிறது. அதாவது காட்டிக் கொடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோர் தேசத் துரோக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் புலனாய்வுத் துறையினரே விசாரணைகளை மேற்கொண்டு பொட்டம்மானின் முடிவிற்கிணங்க தண்டனை வழங்கப்படும் என்ற முடிவு எட்டப்படுகிறது.

பொதுவாக கைதிகள், மாற்று இயக்கத்தினர் போன்றோரின் செயற்பாடுகள் உட்பட ஒட்டு மொத்தமான உள்ளக புலனாய்வு வேலைத்திட்டம் கேணல் கபிலம்மானின் மேற்பார்வையிலே மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதாவது கபிலம்மானின் கீழே இந்த செயற்திட்டத்தை விசுவமடுவில் இருந்த காந்தி என்ற புலனாய்வுத் துறை பொறுப்பாளர்களில் ஒருவர் செயற்படுத்தி வந்தார். கைதிகளைத் தடுத்து வைத்தல், அவர்களை விசாரணைக்கு உட்படுத்துதல், அவர்கள் மீது சித்திரவதைகளை மேற்கொண்டு தகவல்களைச் சேகரித்தல், கடுமையான தண்டனைகளை வழங்குதல் அதாவது மரண தண்டனையையும் அதற்கு உட்பட்ட அனைத்து வகையான தண்டனை நடவடிக்கைகளையும் காந்தியே மேற்பார்வை செய்து வந்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கம் கடும் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருந்த காலப்பகுதியில் முக்கியமாக கட்டாய ஆட்சேர்ப்பு இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் வன்னியிலே மேலும் ஒரு வித்தியாசமான சட்டத்தையும் நடைமுறையையும் புலிகள் மேற்கொள்ள ஆரம்பித்தனர். அதாவது திருமணம் மீதான தடை உத்தரவு சட்டரீதியாக வன்னியில் கடுமையாக அமுல்படுத்தப்படுகிறது. 18வயதிற்கு மேற்பட்ட திருமணம் முடிக்காத எவரும் வன்னியில் புதிதாக திருமணம் முடிக்க முடியாது என்ற கடுமையான புதிய சட்டம் ஒன்றை புலிகள் அமுல்படுத்தி இருந்தனர். வன்னியில் உள்ள அனைத்துப் பதிவாளர்களையும் அழைத்த புலிகள், தமது மறு அறிவித்தல் வரை திருமணப் பதிவுகள் எதனையும் மேற்கொள்ள முடியாது என்று கடுமையான தடை உத்தரவை பிறப்பித்தனர். இந்த நடவடிக்கைக்கு பொறுப்பாக புலிகளின் "தமிழீழ நிர்வாக சேவை" என்ற பிரிவினர் இருந்தனர்.

புலிகளின் நிர்வாக சேவை பொறுப்பாளர் பிரியன் என்பவரின் விசேட அனுமதி இருந்தால் மட்டுமே திருமணம் முடிப்பதற்கு வன்னியில் அனுமதி வழங்கப்பட்டது. பிரியன் தனக்குக் கீழ் நிர்வாக சேவையின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் நாகேஸ் மற்றும் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் விஜிதரன் போன்றோரை இந்த நடவடிக்கைகளை கண்காணிக்கும் மேற்பார்வையாளர்களாக நியமித்திருந்தார். இவ்வாறு தங்களது சட்டத்தை மீறி செயற்பட்ட பதிவாளர்களை இடைநிறுத்துதல் அவர்களுக்குத் தண்டனை வழங்குதல் அவர்கள் மீது விசாரணை செய்தல் போன்ற பொறுப்புக்கள் சின்னப்பா மாஸ்ரர் என்பவரிடம் கையளிக்கப்படுகிறது.

இதனை அடுத்து வன்னிப் பகுதியிலே திருமணம் முடிப்பதென்பது இயலாத காரியமாகவே இருந்து வந்தது. அதாவது பதிவாளர்களைத் தொடர்புகொண்டு மிகவும் இரகசியமாக பதுங்கு குழிகளில் பழைய திகதிகளை போட்டு திருமணங்களை பெருமளவான பணத்தைக் கொடுத்து சிலர் மேற்கொண்டு வந்தனர். இந்த நடவடிக்கை கூட குறிப்பிட்ட சில பதிவாளர்களால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஏனையோர் பயத்தின் காரணமாக மௌனமாகவே இருந்துவிட்டனர். இத்தகைய கடும் பிரயத்தனங்கள் மூலமாக திருமண சான்றிதழ்களைப் பெற்று வைத்திருந்த பலர் தங்களது உயிர்களைக் காப்பாற்றும் உச்ச சாதனமாக இதனைப் பாவித்து வந்தனர். இவ்வாறு இந்த திருமண சான்றிதழ்கள் மூலம் தப்பிய பலரும் இப்பொழுதும் தங்களது உயிர்வாழ்தல் தொடர்பில் மீட்டுப்பார்ப்பர்.

இந்தவகையில், புலிகளின் சட்டத்தை மீறி சம்பந்தப்பட்டோரிடம் கூடுதலான பணம் வாங்கிக்கொண்டு திருமணங்களைப் பதிவு செய்து வந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பதிவாளர் ஒருவரை சின்னப்பா மாஸ்ரர் இடை நிறுத்தியதுடன் அவரிற்கு தண்டனையும் வழங்கியிருந்தார். இவ்வாறான கடுமையான திருமண தடைச்சட்டத்தை புலிகள் நடைமுறைப்படுத்தியமை பல்வேறு கல்விமான்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாக இருந்து வந்தது.

அதாவது புலிகள் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டது, கட்டாய திருமண தடைச்சட்டத்தை அமுல்படுத்தியது போன்ற விடயங்கள் புலிகளிடமிருந்து மக்களை அந்நியப்படுத்த வழிகோலியது. மக்களுக்காக போராடுவதாகக் கூறிக்கொண்ட அமைப்பு மக்களுக்காக பல தியாகங்களை உயிர்க்கொடைகளை செய்த அமைப்பு மக்கள் விரும்பாத வலுவான இரண்டு விடயங்களை - மக்களிடம் நேரடியாகவே பெரும் பாதிப்பை செலுத்தக்கூடிய விடயங்களை - கையாண்டமையானது மக்களிற்கும் புலிகளுக்குமிடையில் பெரும் விரிசல்கள் ஏற்படுவதற்கு அடிப்படையில் பெரியளவில் வழிகோலியது எனலாம்.

அதாவது மக்கள் நலனுக்காக செயற்படுகிறோம் என்று கூறியவாறு மக்கள் விரோத செயற்பாட்டிற்கு பல்வேறு வியாக்கியானங்களை சொல்லியபடி தங்களது கட்டாய ஆட்சேர்ப்பு, கட்டாய திருமண தடைச்சட்டம் என்பனவற்றை அமுல்படுத்தியது எந்த விதத்திலும் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. இவ்வாறு மக்கள் விரும்பாதமேலும் பல சட்டங்களையும், நடைமுறைகளையும் யுத்தம் முடிவிற்கு வருவதற்கு முன்னர் புலிகள் மேற்கொள்ளத் தவறவில்லை. அவற்றையும், தமிழ் ஊடகங்கள் இவை எல்லாவற்றையும் மறைத்துக்கொண்டு மக்களை கடைசி அழிவுகளை நோக்கிச் செல்ல உசார்படுத்தியவாறு இருந்தது எவ்வாறு என்பதையும் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)



# வடக்கில் அபிவிருத்திப் பணிகளையே படையினர் மேற்கொள்கின்றனர்



## சீனாவில் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில 15 ஆயிரம் படையினர் மட்டுமே நிலை கொண்டிருப்பதாகவும், அவர்களும் கூட அபிவிருத்திப் பணிகளையே மேற்கொண்டு வருவதாகவும், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சீனாவில் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் நடந்த உள்நாட்டுப் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட, தமிழர்கள் அதிகம் வாழும் வடக்குப் பகுதியை,. வேண்டுமேன்றே இராணுவமயப்படுத்தும் முயற்சிகள் ஏதும் இடம்பெறவில்லை.

போரின்போது வடக்கில் 65 ஆயிரம் படையினர் நிலை கொண்டிருந்தனர். தற்போது அங்கு வெறும் 15 ஆயிரம் படையினர் மட்டுமே நிலை கொண்டிருக்கின்றனர். அவர்களும் கூட அபிவிருத்திப் பணிகளையே மேற்கொள்கின்றனர்.

அவர்கள் சமூகத்தில் முன்னுதாரணமாக திகழ்கின்றனர் என்று தெரிவித்துள்ளார். அரசுப் படைகளால் இழைக்கப்பட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், மிகவும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது, அதனால் தான், வரும் நவம்பரில் கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாடு இலங்கையில் நடக்கவுள்ளது என்று தெரிவித்தார்.

போருக்குப் பிந்திய நிலைமைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், ஒரே இரவில் எல்லா மாற்றங்களையும் செய்ய முடியாது. இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர். கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடக்கின்றன.

உள்நாட்டுப் போருக்குக் காரணமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அரசியல் தீர்வு உள்ளுக்குள் இருந்தே வர வேண்டும். வடக்கில் இந்த ஆண்டு இறுதியில் மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலஞ்சம் பெற்றவேளை ஹோமாகம நீதிபதி கைது

(கொழும்பு)

ஹோமாகம மாவட்ட நீதிபதி சுனில் அபேசிங்க 3 இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட போது நேற்று முன்தினம் இலஞ்ச மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர் தரப்பிற்கு சார்பான வகையில் வழக்கினை விசாரிப்பதன் பொருட்டே அவரால் இலஞ்சம் பெற்றுக கொள்வதற்கு முயற்சிக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் லக்ஷ்மி ஜயவர்தன தெரிவித்தார்.

இதன்படி, குறித்த 3 இலட்சம் ரூபா நிதியை பெற்றுக்கொள்ளுவதற்காக நேற்று முன்தினம மாலை ஹங்வெல்ல பகுதிக்கு சென்றிருந்தபோது ஹோமாகம மாவட்ட நீதிபதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகத்திற்குரிய மாவட்ட நீதிபதி நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக இலஞ்ச மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

## நூதனசாலையில் காயமடைந்த

## ஆசிரியை, மாணவர்கள் உதவியற்ற நிலையில்

(கொழும்பு)

கடந்த மார்ச் 28 ஆம் திகதி, கொழும்பு நூதனசாலையில் படியொன்று இடிந்து விழுந்ததில் காயமடைந்த, வெலிமட அபகஸதோவ சிறி சுமனபோதி மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியையும் உதவியற்ற நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த நான்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியை ஒருவரும் இன்னும் சிகிச்சை பெற்று வருவதாக குறித்த பாடசாலையின் அதிபர் தயாவனி மெனிக்கே தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காடடியுள்ளார்.

மேலும் தமது மகள் தொடர்பில் எந்த ஒரு அதிகாரியும் கவனம் செலுத்தவில்லை என, குறித்த விபத்தில் காயமடைந்த மாணவி ஒருவரின் தந்தை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமக்கு ஏற்பட்ட விபத்தால், தன்னிடம் கற்ற மாணவ, மாணவிகள் பாதிக்கப்படுவதாக சிறி சுமனபோதி மகா வித்தியாலய ஆசிரியை ஆர்.எம்.மங்கலிகா கூறியுள்ளார்.

## குண்டு துளைக்காத வாகனம் ஏன்? சுவிஸிடம் கேட்கவுள்ள சிறிசேன;



(கொழும்பு)

ஜெனிவாவில் தங்கியிருந்தபோது தனக்கு குண்டு துளைக்காத சிறப்பு வாகனம் வழங்கப்பட்டது ஏன் என்று சுவிற்சர்லாந்து அரசாங்கத்திடம் சுகாதார அமைச்சர் மைததிரிபால சிறிசேன கேள்வி எழுப்பவுள்ளதாக கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக இது தொடர்பாக சுவிஸ் அரசாங்கத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலநறுவவில் இருந்து கொழும்பு திரும்பியதும் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜெனிவாவில் தனக்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்பட்டது எதற்காக என்று சுவிஸ் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியதாகவும், அதற்கு அவர்கள் உயர்மட்ட உத்தரவு என்று பதிலளித்ததாகவும். மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் போர் நடந்து கொண்டிருந்த போது - அவர்கள் தம்மை இலக்கு வைத்து குண்டு தாக்குதலை நடாத்தியிருந்த சூழலில் ஜெனிவா மாநாட்டுக்குச் சென்ற தமக்கு அத்தகைய பாதுகாப்பு ஏதும் வழங்கப்படவில்லை என்றும். ஆனால் போர் முடிந்து நான்கு ஆண்டுகள் கழித்து இத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட்டது ஏன் என்று தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## ஷிராணி மீதான குற்றப் பிரேரணை ஹேரத், சம்பந்தன் கருத்துக் கூறலாம்

### அனுமதியளித்தது உயர் நீதிமன்றம்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள விசேட மேன்முன்றையீட்டு மனுக்குறித்து கருத்துத் தெரிவிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன் மற்றும் விஜித ஹேரத், ஆகியோருக்கு உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்துள்ளது.

குற்றப்பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்ட கட்டளையை இரத்துச் செய்யுமாறு கோரியே சட்டமா அதிபரினால் விசேட மேன்முறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது.


இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான சலீம் மர்சூக், பி.ஏ. ரத்னாயக்க, சந்தியா ஹெட்டிகே, ரிவாவண சுந்தர, ரோகிணி மாரசிங்க ஆகிய ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழாம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன் மற்றும் விஜித ஹேரத் ஆகியோரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளினால் முன்வைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையிலேயே அவ்விருவருக்கும் கருத்துரைப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

மனு மீதான விசாரணை யூன் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## அபிவிருத்திக்கான நிதியுதவி இலங்கைக்கு முன்னுரிமை

### சீன அபிவிருத்தி வங்கி உறுதியளிப்பு



(கொழும்பு)

அபிவிருத்திக்கான நிதியுதவியின் போது இலங்கைக்கு முன்னுரிமை வழங்கப்படுமென சீன அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சீன அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஹு ஹுவாய் பெங் சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பீஜிங் நகரிலுள்ள சைனா வேல்ட் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் முற்பகல் இந்தச்சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது சீன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகமும் சந்திப்பில் கலந்து கொண்டதாக ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்தார்.

சீன அபிவிருத்தி வங்கி இலங்கை அபிவிருத்தி தொடர்பாக நெருக்கமாக செயற்படுகிறது. எதிர்காலத்திலும் இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்புகள் வழங்கப்படுமென சீன அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை பயங்கரவாதம் அழிக்கப்பட்டதன் பின்னர் நாட்டிலுள்ள அனைத்து பிரதேசங்களும் உள்ளடங்கும் விதத்தில் சமமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்க அரசாங்கம் முன்னுரிமை வழங்கி செயற்படுகிறது. இதற்கு சீன அபிவிருத்தி வங்கி வழங்கும் ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் சீன அபிவிருத்தி வங்கியின் தலைவருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

## மாணவர் நலன்கருதி பத்து நிமிட உடற்பயிற்சி

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பாடசாலைகளிலும் மாணவர்களின் நலன்கருதி 10 நிமிட நேரத்திற்கு உடற்பயிற்சியை வழங்கும் நடவடிக்கைகளை கல்வியமைச்சு ஆரம்பிக்கவுள்ளது. எதிர்வரும் ஜூன் 10 ஆம் திகதி முதல் சகல பாடசாலைகளிலும் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் நீரிழிவு மற்றும் ஏனைய தொற்றும், தொற்றாத நோய்களின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் மாணவர்களின் உடல், உள ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலைகளில் உடற்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

தினமும் பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் 10 நிமிடங்கள் வரை உடற்பயிற்சி வழங்கப்பட வேண்டும். இதற்காக புதிய பயிற்சிகள் அடங்கிய திட்டம் கல்வியமைச்சினால் வடிவமைக்கப்பட்டு சகல பாடசாலைகளுக்கும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலன்கருதியே உடற்பயிற்சித் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசியல் தீர்வு தொடர்பில் கூட்டமைப்பிடம் எந்தவிதத் தீர்மானங்களும் இல்லை

— பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் —



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் தீர்வைக் காண்பதற்கான ஒரு குழுவை அமைக்கப் போவதாக கூட்டமைப்பினர் பலத்த இழுபறியின் பின்னர் இணங்கியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இதன் மூலம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் கூட்டமைப்பினரிடம் எவ்விதமான தீர்வுகளோ, தீர்மானங்களோ இன்று வரை இல்லையென்பதை மிகத் தெளிவாக உணரமுடிகிறது என பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளருமான ஐயாத்துரை சிறி ரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

பருத்தித்துறை முனை மதவடிப்பகுதியில் கடற்றொழிலாளர் இளைப்பாறுமண்டபம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அருள்தாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், இரண்டுநாடுகளுக்கு இடையில் பிரச்சினைகள் தோன்றும் போது ஐக்கியநாடுகள் சபை அவர்களுக்குள் இணக்கத்தை ஏற்படுத்த முயன்று வந்துள்ளது. இரண்டு இனங்களுக்கு அல்லது மதங்களுக்கு இடையில் பிரச்சினைகள் தோன்றும் போது சமாதானத் தூதுவர்கள் மத்தியஸ்தம் வகித்துவந்ததைப் பார்த்துள்ளோம். ஆனால இங்கு ஒரு இனத்தின் அரசியல் உரிமைகளுக்காக தேர்தல் காலங்களில் ஐக்கியம் பேசி, வாக்குக்களை அபகரிப்பவர்கள் தேர்தல் முடிந்தவுடன் ஐக்கியத்தைப் பேச்சளவில் முடித்துக் கொள்கின்றார்கள். அவர்களுக்குள் ஒரு இணக்கத்தை ஏற்படுத்த மன்னாரில் மதத் தலைவர் முயற்சியை மேற்கொண்டும் அந்த முயற்சி தோல்வியடைய அதிலிருந்துதமிழர் விடுதலைக் கூட்டணி வெளியேறி அறிக்கை விடுத்ததையும் பார்க்கின்றோம்.

தங்களை அசைக்க முடியாது, அழிக்க முடியாது என வலிமையைப் பறைசாற்றிக் கொள்ளும் கட்சிகள், ஜனநாயகத்தில் மக்களைத் தனியாகச் சந்திக்கத் திராணியற்றுத்தான், கூட்டமைப்பு என மக்களை ஏமாற்றி வருகின்றன. தற்போது தமதுவீரப் பெருமைகளையே மன்னார் ஆண்டகை நடாத்திய கூட்டத்தில் முழங்கினார்கள் என தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஐயா தெரிவித்திருந்தார்.

இதன் மூலம், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடரபில் கூட்டமைப்பினரிடம் எவ்விதமான தீர்வுகளோ, தீர்மானங்களோ இன்றுவரை இல்லையென்பதை மிகத் தெளிவாக உணரமுடிகிறது எனவும் தெரிவித்தார். இக்கலந் துரையாடலில் பருத்தித்துறை நகர சபை எதிர்க்கட்சிததலைவர் சிவ.முகுந்தன் கலந்துகொண்டார்.

## தொழில் வாய்ப்பை வழங்கும் விசேட செயற்திட்டம் நடைமுறை

மனிதவலு வேலை வாய்ப்புத்திணைக்களமும் சண்டிலிப்பாய் சங்கானைப்பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் சங்கானை பிரதேச செயலக மனிதவள அலுவலகர் பா.சிறீபவன் தலைமையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 2.00 மணிவரை நடைபெற்றது.

இதில் விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ். முரளிதரன், சங்கானை பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் வி.சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் 10 மேறபட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டதுடன் இங்கு 400இற்கு மேற்பட்ட தொழில் தேடுவோர் கலந்து கொண்டனர். இதில் 100 பேருக்கு வேலை உறுதிப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (180)

## காதைக் கடித்தவருக்கு 7 நாட்கள் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் காதைக் கடித்தவரையும், மற்றொருவரையும் 7 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி யாழ்ப்பாணம், நாவாந்துறை பகுதியில் 7 பேரைக் கொண்ட குழுவினர் மது அருந்திக் கொண்டிருந்த வேளையில் அவர்களுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அந்தத் தர்க்கத்தின் போது அருகில் இருந்த நண்பனின் காதை இளைஞர் ஒருவர் கடித்துள்ளார்.

காதில் கடி வாங்கியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டின் பிரகாரம் மேற்றுமுன்தினம் குறித்த இளைஞர் யாழ்.பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, இக்குழுவில் இருந்த மற்றொருவரும் யாழ். சிறுகுற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இருவரையும் சிறு குற்றத் தடுப்பு பொலிஸார் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை, இருவரையும் ஜூன் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் உத்தரவிட்டுள்டார். (25)

## புதிய நிர்வாகத்தெரிவு

(அச்சுவேலி)

வளலாய் சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் சனசமூகநிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக சி.சிவரூபன், செயலாளராக ந.சதீஸ்குமார், பொருளாளராக க.கமலநாதன், காப்பாளர்களாக க.சுந்தரலிங்கம், சி.செல்வரத்தினம் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக தே.கஜேந்திரன், க.ஜெகநாத், அ.தவச்செல்வன், வி.விஜிதரன், வை.நவநீதன், ச.ஜெனகராஜ், ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (85)



ஒலுமடு கமநல சேவைத திணைக்களத்திற்கு சொந்தமான உழ்வு இயந்திரங்கள் மழையில் நனைந்தும் பாதுகாப்பற்ற நிலையில் பயன்படுத்தப்படாது நிற்பதையும் காணலாம். (140)

## சிறப்புற நடைபெற்ற வெசாக் நிகழ்வு

(கரணவாய்)

கரவெட்டி கலிகை சந்திப் பகுதி இராணுவத்தினரின் வெசாக தின நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

கரணவாய் இராணுவ பொறுப்பதிகாரி கே.எஸ்.ஏச்.சில்வாரெஜி மேன் தலைமையில் இராணுவத்தினர், பொது மக்களுக்கு உணவுகள், குளிர்பானம் என்பவற்றை வழங்கினர். (18)

## பொதுக்கூட்டம்

(வரணி)

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் வைத்தியசாலை பொறுப்பதிகாரியின் கீழ் நாளை சனிக்கிழமை பி.ப.1 மணியளவில் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அபிவிருத்திச்சபை செயலாளர் க. பசுபதி அறிவித்துள்ளார். (150)

## முரசின் இன்றைய பலன்

(31.05.2013 - வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் வைகாசி மாதம் 17 ஆம் திகதி.
நட்சத்திரம் அவிட்டம் பிற்பகல் 01.01 வரை. திதி - ஸப்தமி
முன்னிரவு 07.07 வரை. இராகுகாலம் 10.22 - 11.52 வரை.
சுபநேரம் 05.52 - 07.22 வரை. சித்தம், கரிநாள்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சமூகத்தில் நன்மதிப்பு. உழைப்பினால் உயர்ச்சி. தொழில் சிறந்து, புதிய சாதனை. அதிக பணவரவு. வரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். தொல்லை தந்து வந்த உடல்பிணி குறையும். வெளியூரிலிருந்து சுப செய்தி. நித்திரையில் கனவு. |
| ரிஷபம் | வீண் பழியும் தொல்லையும் வரும். முன்கோப மன நிலையால் சில குளறுபடிகள். தொழிலில் போட்டி இருக்கும். பணவரவு சுமார். குடும்ப ஒற்றுமை அவசியம். உடல்நலத்திற்கு உணவில் கவனம். இசை ரசித்து மன அமைதி. |
| மிதுனம் | மாறுபட்டு நடந்தவர்களும், முன்வந்து அன்பு பாராட்டுவர். வாழ்வின் வளத்திற்கு புதிய அனுகூலங்கள் உருவாகும். தொழில் வளர்ச்சி. பணவரவு முன்னேற்றம். குடும்ப பாசமும் ஒற்றுமையும் ஓங்கும். பழைய நண்பர் சந்திப்பார். |
| கடகம் | கூடுதல் உழைப்பால் எதிர்பார்த்த அனுகூலம் வரும். தொழிலில் மாறுதல் உண்டாக்குவீர்கள். போட்டியை தக்கவிதத்தில் எதிர்கொள்வீர்கள். செலவுக்குத் தக்க பணவரவு. எதிர்பாராத உதவி கிடைக்கும். உணவில் எச்சரிக்கை. |
| சிம்மம் | முன்னேறும் வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். வியத்தகு செயல்கள் நடக்கும். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம். தாராள பணவரவு. உத்தியோகத்தர்க்கு பதவி சலுகை அனுகூலம். புதிய முயற்சிகள் வெற்றியடையும். |
| கன்னி | மனதில் புத்துணர்வு மிகும். தொழிலில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். சராசரி பணவரவு. உறவினர், நண்பர் உபசரிப்பில் மகிழ்வீர்கள். கொடுத்த கடன் வந்து சேரும். வெளியூரிலிருந்து நற்செய்தி. மாணவர்க்கு உயர்ச்சி. |
| துலாம் | சிறு சிறு குழப்பங்கள் வரும். பேச்சைக் குறைத்து பகையை மாற்றுக. தொழில் சுமுகம். அளவான பணவரவு. சேமிப்பு செலவுக்குப் பயன்படும். தாயுடன் விவாதம் உருவாகலாம். மனதின் குழப்பம் போக்க இறை பக்தியில் நாட்டம். |
| விருச்சிகம் | விருந்தினர் வருகை. உற்சாகம். புதிய வேலை ஒன்று வரும் ஆர்வமுடன் முடிப்பீர்கள். தொழில், இருந்த இடையூறு விலகும். சராசரி பணவரவு. அரசவகையில் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் நற்செய்கை மகிழ்விக்கும். |
| தனுசு | புதிய திட்டங்களுடன் துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். இடையூறு செய்வோரை இனங்காண்பீர்கள். தொழில் நல்ல முன்னேற்றம் பெறும். ஆதாய பணவரவு. வீட்டுப்பொருட்கள் வாங்கலாம். உடல் ஆரோக்கியம் திரும்பும். |
| மகரம் | இரக்கம், கருணைத்தன்மையோடு நடந்துகொள்வீர்கள். உதவி பெற்றவர் வாழ்த்துவர். தொழிலில் அனுகூல நிலைமையைப் பயன்படுத்துக. பணவரவு திருப்திகரம். தாயின் தேவை பூர்த்தி செய்வீர்கள். பொறுமையால் பெருமை வரும். |
| கும்பம் | மனதில் உற்சாகமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். முடியாதிருந்த வேலைகள் எளிதில் முடியும். தொழிலில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் கூடும். புதியன செய்யும் ஆர்வம் பிறக்கும். பிள்ளைகள் உதவுவார்கள். மகிழ்ச்சி. |
| மீனம் | அவசரப்பணி ஒன்று வந்து அல்லல் தரும். எதிர்ப்பை அன்பால் விலக்கவும். தொழிலில், சகபாடிகளின் உதவி கிடைக்கும். அளவான பணவரவு. போக்குவரத்தில் கவனம். குடும்ப சச்சரவு வந்து நீங்கும். புது முயற்சிகள் தொடங்க வேண்டாம். |

# முறைப்பாடு இல்லை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற சிறிலங்கன் பிரிமியர் லீக் கிரிக்கெட் அணிகளின் உரிமையாளர்கள் இருவர் ஐ.பி.எல் போட்டிகளில் ஆட்ட நிர்ணய தரகர்களாக செயற்பட்டமை தொடர்பில் எந்தவிதமுறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை



என்று இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிசாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.இலங்கையில் நடைபெற்ற சிறிலங்கன் பிரிமியர் லீக் கிரிக்கெட் அணிகளின் உரிமையாளர்கள் இருவர் ஐ.பி.எல் போட்டிகளில் ஆட்ட நிர்ணய தரகர்களாக செயற்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதுகுறித்து கருத்து வெளியிட்ட நிசாந்த ரணதுங்க, அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் முறைப்பாடுகளாககிடைக்கப் பெறும் பட்சத்தில், தாம் விசாரணைகளை மேற்கொள்ளத் தயார் எனத் தெரிவித்தார். சிறிலங்கன் பிரிமியர் லீக் கிரிக்கெட்அணிகளின் உரிமையாளர்கள் இருவர் இந்த முறை இடம்பெற்ற ஐ.பி.எல் போட்டியில் ஆட்ட நிர்ணய தரகர்களாக செயற்பட்டதாக இந்திய நடிகரான விந்து தாரா சிங் என்பவர் மும்பை காவற்துறையினருக்கு தகவல் வழங்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன.

# மூன்றாவது சுற்றில் செரீனா

(பாரிஸ்)


பிரெஞ்ச் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் மூன்றாவது சுற்றுக்கு அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தகுதிபெற்றுள்ளார்..

நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் பிரான்சின் கரோலின் கார்சியாவை சந்தித்தார்.

இதில் செரீனா வில்லியம்ஸ் 6-1, 6-2, என்ற நேர் செட்களில் கரோலின் கார்சியாவை வீழ்த்தி மிக எளிதில் வெற்றிபெற்றார். இதன் மூலம் செரீனா வில்லியம்ஸ் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் பெலாரசின் விக்டோரியா அசரன்கா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய அசரன்கா 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.





# அரையிறுதியே இலக்கு


(லண்டன்)

ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் அரையிறுதிகுள் நுழைவதே எமது முதல் இலக்கு என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

இத்தொடரின் அரையிறுதிக்குள் நுழைவதே எமது முதல் இலக்கு. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை வெல்வதற்கான வாய்ப்பு இம்முறை இலங்கை அணிக்கு உள்ளது.

அனுபவ வீரர்களும் இளம் வீரர்களும் இணைந்து சிறந்த அணியாக இத் தொடரில் களமிறங்கவுள்ள நாம் ஏனைய அணிகளுக்கு சவாலாக இருப்போம்.

தொடரின் அரையிறுதியே எமது முதல் இலக்கு. குழுநிலைப்போட்டிகளில் சிறப்பான வெற்றிகளைப்பெற்று அரையிறுதிக்கு முன்னேறுவதையே எமது முதல் இலக்காக கொண்டுள்ளோம். அது முடியும் என்ற நம்பிக்கையும் எமக்கு உள்ளது. இருப்பினும் இங்கிலாந்து கால நிலைக்கு விரைவாக மாறிக்கொள்வது முக்கியம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# விசாரணைக்குத் தயார்

(லாகூர்)

இந்தியன் பிரிமியர் கிரிக்கெட் தொடரில் நடந்த சூதாட்டம் தொடர்பாக, ஐ.சி.சி., சார்பில் நடாத்தப்படும் விசாரணைக்குத் தயாராக உள்ளேன் என, பாகிஸ்தான் நடுவர் அசத் ரௌப் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த ஆறாவது ஐ.பி.எல். தொடருக்கான சூதாட்ட சர்ச்சையில் அசத்ரௌப் சிக்கியுள்ளார். இவரை விசாரிக்க மும்பை பொலிஸார் திட்டமிட்டிருந்தனர். இதனை அறிந்த அசத், இந்தியாவை விட்டு வெளியேறி சொந்த ஊரான லாகூருக்குத் தப்பிச் சென்றார். சூதாட்ட புகார் சர்ச்சையில் சிக்கியுள்ள இவரை, சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான நடுவர் பட்டியலில் இருந்து ஐ.சி.சி., நீக்க நடவடிக்கை எடுத்தது.

இது குறித்து லாகூரில் இருந்து அசத் ரௌப் கூறியது: ஆறாவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நடந்த சூதாட்டத்துக்கும், எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. பணம்,. பரிசுப் பொருட்கள், சூதாட்டம் போன்றவை எனது நோக்கம் மற்றும் இலக்கு கிடையாது. இதுகுறித்து என் வாழ்நாளில் ஒருபோதும் சிந்திக்கவில்லை. என் மீது சுமத்தப்பட்டுள்ள சூதாட்ட புகார் குறித்து ஐ.சி.சி., ஊழல் தடுப்பு மற்றும் பாதுகாப்புப் பிரிவு மூலம் நடத்தப்படும் விசாரணைக்கு தயாராக உள்ளேன். விசாரணையின் போது கேட்கப்படும் கேள்விகளுக்கு சரியான முறையில் பதிலளிப்பேன். இதன்மூலம் நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிப்பேன் எனத் தெரிவித்தார்.

# இம்முறையும் வெல்வோம்

(லண்டன்)



சம்பியன்ஸ் கிண்ணத்தை கடந்த 2004ஆம் ஆண்டு வென்றதைப் போல இந்த முறையும் கைப்பற்ற விரும்புகிறோம் என மேற்கிந்தியத்தீவு அணியின் அனுபவ வீரர் சர்வான் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து ஆடுகளங்களில், பந்தின் போக்கை நன்கு கவனித்து கடைசி விநாடி வரை காத்திருந்து விளையாடுவது அவசியம். இங்குள்ள மைதானங்களில் பந்து விரைவாக எல்லைக் கோட்டை எட்டிவிடும். களத்தடுப்பு வியூகம் கடுமை யாக இருந்தாலும் கூட எளிதாக பவுண்டரி அடித்துவிடலாம். பொறுப்பான ஷொட்களை தேர்வு செய்து ஆடினால் அதற்கான பலன் நிச்சயம்.

சம்பியன்ஸ் கிண்ணத்தை வெல்வது என்பது மிகப் பெரிய சாதனை. கடந்த 2004ஆம் ஆண்டு தொடரில் நாங்கள் களமிறங்கியபோது, எங்கள் அணியை யாருமே ஒரு பொருட்டாக நினைக்கவில்லை.மிகவும்பலவீன மான அணியாகக் கணித்தனர். ஆனால், நாங்கள் ஒருங்கிணைந்து விளையாடி கிண்ணத்தைக் கைப்பற்றினோம். அதே போன்ற சாதனையை இம்முறை மீண்டும் நிகழ்த்த வேண்டும் என விரும்புகிறோம். முன் வரிசை வீரர்கள் நிலைத்து நின்று விளையாடினால், அடுத்து வரும் வீரர்கள் அதிரடியைக் காட்ட ஏதுவாக இருக்கும். கைவசம் கணிசமான விக்கெட்டுகள் இருந்தால் நம்பிக்கையுடன் அடித்து விளையாட முடியும். கடைசிக் கட்டத்தில் விளாசித் தள்ளிவிடலாம். கடந்த சில மாதங்களாக இங்கு கிளப் போட்டிகளில் விளையாடியது நல்ல அனுபவமாக இருந்தது. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு அது வெகுவாக உதவும் என நினைக்கிறேன். தற்போது நல்ல ஆட்டத்திறனுடன் இருக்கிறேன். சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு பங்களிக்க முடியும் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய அணியுடனான மோதல் முக்கியமானது



(லண்டன்)

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட்டில் இந்திய அணியுடன் இடம்பெறும் மோதல் முக்கியமானது என பாகிஸ்தான் கப்டன் மிஸ்பா உல்ஹக் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களைப் பிடித்துள்ள அணிகள் மட்டுமே விளையாடுவதால், எந்த அணியும் சுலபமாக இருக்காது. ஒவ்வொரு ஆட்டங்களும் கடினமாக இருக்கும். இந்த 8 அணிகளில், யார், யாரை யாரைத் தோற்கடிக்கப்போகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. எனவே ஒவ்வொரு ஆட்டத்திலும் 100 சதவீத திறமையை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும். இந்த மாதிரியான போட்டித் தொடரில் கொஞ்சம் கூட ரிலாக்சாக இருக்க முடியாது.

இந்தத் தொடரில், முதல் இரு லீக் ஆட்டங்கள் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் கடைசி லீக் ஆட்டத்தின் போது, தொடரில் நாம் இருக்கிறோமோ, இல்லையா என்பது ஏறக்குறைய தெரிந்து விடலாம்.

இந்தியாவுடன் விளையாடுவது எப்போதும் முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இந்தியா-பாகிஸ்தான் போட்டியைக் காண இரு நாட்டு மக்களும் மிகவும் ஆர்வமாக இருப்பார்கள். அது மட்டுமின்றி இவ்விரு அணிகளுக்கு உலகம் முழுவதும் மிகப்பெரிய இரசிகர் பட்டாளம் இருக்கிறது. இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி வெற்றி பெற வேண்டும்.

சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் எங்களுக்கு எப்பொழுதும் சிறப்பு வாய்ந்தவர். இப்போது, உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் அவரும் ஒருவர். அவர் அணிக்காக சிறப்பான பங்களிப்பை அளித்து வருகிறார். இந்தத் தொடரிலும் அதை செய்வார் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.



சர்வதேச கிரிக்கெட் சபையின் பொதுச் சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இங்கிலாந்தின் லோர்ட்ஸில் இடம்பெற்றது. கலந்துரையாடலின் பின்னர் பொதுச் சபை உறுப்பினர் புகைப்படத்திற்கு காட்சி கொடுப்பதைக் காணலாம்.

# பலிக்குமா? சச்சினின் எதிர்வுகூறல்

எதிர்வரும் 2022இல் கட்டாரில் நடைபெற உள்ள உலகக் கிண்ண கால்பந்துத் தொடருக்கு இந்திய அணி தகுதி பெறும் என்று சச்சின் டெண்டுல்கர் நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்வரும் 2022இல் இந்திய கால்பந்து அரங்கில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். கட்டார் தலைநகர் டோகாவில் நடக்கவுள்ள பிபா உலகக் கிண்ண கால்பந்து தொடரில் விளையாட இந்திய அணிதகுதி பெறும் என்று நம்புகிறேன்.

இதனை இலக்காகக் கொண்டு இளம் வீரர்கள் செயற்பட வேண்டும். இவர்களுக்கு மூத்த வீரர்கள் ஆலோசனைகள் வழங்கி வழிநடத்த வேண்டும். நான் இன்று வரை கிரிக்கெட்டை காதலிக்கின்றேன். ஒவ்வொருவரும் நீங்கள் நேசிக்கும் எதிலாவது விடா முயற்சியுடன் காதலித்துப் பாருங்கள் நிச்சயம் சாதிப்பீர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜொனியன்ஸ் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடைபெறும் 20, 30, 40 மற்றும் 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டிகளின் தரவரிசைப் பட்டியலில் யாழ். ஜொனியன்ஸ் அணி முன்னிலையிலுள்ளது.

யாழ்.சென்ரல்விளையாட்டுக்கழகம் ஜோர்ஜ் வெப்ஸ்டர் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையில் இப்போட்டியினை நடத்தி வருகின்றது.

1.01.2013 இலிருந்து 29.5.2013 வரையும் நடைபெற்ற 68 போட்டிகளின் முடிவுகள் அடிப்படையில் முன்னிலையிலுள்ள அணிகளின் விபரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இத்தரப்படுத்தலில் யாழ்.ஜொனியன்ஸ் அணி 13 போட்டிகளில் பங்குபற்றி 10 வெற்றிகளைப் பதிவாக்கி 73.3 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.யாழ்.பல்கலைக்கழக அணி 13 போட்டிகளில் பங்குபற்றி 10 வெற்றிகளைப் பதிவாக்கி 69.3 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தினையும், ஜொலிஸ்ரார்ஸ் அணி 12 போட்டிகளில் பங்குபற்றி 9 வெற்றிகளைப் பதிவாக்கி 60.5 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது. (எஸ்.பி.)

**தரப்படுத்தல் விபரம்**

| இல | அணிகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 01) | யாழ். ஜொனியன்ஸ் | 73.3 |
| 02) | யாழ். பல்கலைக்கழகம் | 69.3 |
| 03) | ஜொலிஸ்ரார் | 60.5 |
| 04) | கொக்குவில் கே.சி.சி.சி. | 42.5 |
| 05) | ஒல்ட்கோல்ட்ஸ் | 38.7 |
| 06) | மானிப்பாய் பரிஸ் | 28.7 |
| 07) | சென்றலைட்ஸ் சொக்ஸ் | 23.9 |
| 08) | ஸ்ரான்லி | 23.8 |
| 09) | திருநெல்வேலி கிரிக்கெட் அணி | 22.4 |
| 10) | கிராஸ் கோப்பர்ஸ் | 22.2 |
| 11) | யாழ். சென்றல் | 22.2 |

# கிண்ணம் வென்றது புங்குடுதீவு நசரத், சென்.சேவியர்



(புங்குடுதீவு)

புங்குடுதீவு விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியில் புங்குடுதீவு நசரத் மற்றும் சென். சேவியர் அணிகள் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

புங்குடுதீவு சித்திவிநாயகர் சனசமூக நிலையம், சன்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மற்றும் ரேணுகா முன்பள்ளி என்பன இணைந்து தீவக கால்பந்து அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டத் தொடரை கடந்த 23,24,25ஆம் திகதிகளில் நடத்தியது.

ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்கள் கடந்த 25ஆம் திகதி சன்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் புங்குடுதீவு நசரத் அணியும், ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே புங்குடுதீவு நசரத் அணி ஆதிக்கம் செலுத்தியது. முற்பாதி ஆட்டத்தில் ஒரு கோலையும், பிற்பாதி ஆட்டத்தில் ஒரு கோலையும் போட்டு முன்னிலை பெற்றது. இறுதியில் புங்குடுதீவு நசரத் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் புங்குடுதீவு சென். சேவியர் அணியும், புங்குடுதீவு சன்ஸ்ரார் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே சிறப்பான முறையில் ஆடிய சென். சேவியர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

கிண்ணம் வென்ற நசரத் அணிக்கு ஐயாயிரம் ரூபா பணப் பரிசும், இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட காந்திஜி அணிக்கு இரண்டாயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது. இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் வெற்றிபெற்ற அணிகளுக்கு கிண்ணம் வழங்கிக் கௌரவித்தார். (21)

# கிளிநொச்சி மாவட்ட மட்ட கால்பந்து வேரவில் இந்து ம.வி. சம்பியன்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரில் வேரவில் இந்து மகாவித்தியாலயம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளின் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி அண்மையில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் வேரவில் இந்து மகாவித்தியாலய அணியும், இரணைதீவு றோ.க.த வித்தியாலய அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே வேரவில் இந்து மகாவித்தியாலய அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் வேரவில் இந்து மகாவித்தியாலய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாவட்ட சம்பியன் பட்டத்தை வென்றது.

இதில் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாசிரியர்கள், வீரர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது.

# மைலோ கிண்ண வலைப்பந்து அடுத்தவருடம் கிளிநொச்சியில்

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மைலோ கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி அடுத்த வருடம் கிளிநொச்சியில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது மாவட்ட ரீதியான மைலோ கிண்ணப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மைலோ கிண்ணப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மற்றும் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன. தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 8,9,10ஆம் திகதிகளில் பிலியந்தலை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிலையில் வடக்கு மாகாண வீரர்களும் அனைத்து விளையாட்டுக்களிலும் சாதித்து வருகின்றமையால் இம் மாகாண வீர,வீராங்கனைகளை மேலும் உற்சாகப்படுத்தும் வகையில் அடுத்த வருடம் இடம்பெறும் மைலோ கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியை வடக்கு மாகாணத்தில் நடத்த வேண்டும் என கல்வி அமைச்சும், பாடசாலை வலைப்பந்தாட்ட சங்கமும் மைலோ நிறுவனத்திம் கோரியுள்ளன.

இது குறித்து கருத்துத் தெரிவித்த பாடசாலைகள் வலைப்பந்தாட்ட சங்கத் தலைவர், சுதர்மா ஜெயவர்த்தன, அகில இலங்கை பாடசாலைகள் வலைப்பந்தாட்டப் போட்டிகளை அடுத்த வருடம் கிளிநொச்சி மாவட்த்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதே வேளை, தேசிய மட்டப் போட்டிகளில் அதிகளவிலான தமிழ் வீராரங்கனைகள் பங்குபற்றுவதால் தமிழ்மொழியிலும் அறிவித்தல்கள் விடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இது உண்மையில் வட பகுதி வீரர்களின் திறனைக் காட்டுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# டயலொக் வசம் இலங்கை கிரிக்கெட் அனுசரணை

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணிக்கான அனுசரணை வழங்குவதற்கான பகிரங்க ஏலக் கோரலை டயலொக் ஆக்சியாடா நிறுவனம் தன்வசப்படுத்தியுள்ளது. 753.9 மில்லியன் ரூபா மற்றும் வரிகளை உள்ளடக்கிய தொகைக்கான அனுசரணையை வழங்க முன்வந்துள்ளதாக டயலொக் ஆக்சியாடா நிறுவனம் கொழும்பு பங்குச்சந்தையில் தரவு வைத்துள்ளது.

இதற்கமைவாக இலங்கையின் ஆண்கள் மற்றும் பெண்கள் தேசிய கிரிக்கெட் அணிக்கான 3 வருட காலப்பகுதிக்கு பிரதான அனுசரணையாளராக டயலொக் ஆக்சியாடா தெரிவாகியுள்ளது. இந்த அனுசரணை நாளை முதல் அமுலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'துக்ளக்' நிருபர்களிடம் நமது மக்கள் சொன்னவை...



**புதுக்குடியிருப்பில் ஒரு தேநீர் விடுதியில் நாங்கள் சந்தித்த சுமார் எழுபது வயதுப் பெரியவர் சொன்னது:**

"போர் ஆரம்பித்த காலத்தில் நாங்களே பொடியன்களைத் தட்டிக் கொடுத்தது உண்மை. ஆனால், காலப்போக்கில் உயிரிழப்புகள் அதிகமாக, அதிகமாக வேதனை எங்களை வாட்டத் துவங்கி விட்டது. எத்தனையோ பேச்சுவார்த்தைகளில் அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்று, புலிகள் போரை நிறுத்தியிருக்கலாம். ஆனால், அவர்கள் கடைசி நாள் வரை அதற்குத் தயாராக இல்லாமல் போய் விட்டார்கள். இதனால் கொத்து கொத்தாகத் தமிழர்கள் பலியாக வேண்டியதாயிற்று. இலங்கை இராணுவம் விமானம் மூலம் குண்டுகளை வீசி தமிழர்கள் பலரைக் கொன்றது உண்மை. ஆனால், புலிகள் நினைத்திருந்தால் அதைத் தவிர்த்திருக்க முடியும். "எங்களுக்குத் தனி நாடே வேண்டாம். எங்களை விடுங்கள். நாங்கள் எங்காவது போய் பிழைத்துக் கொள்கிறோம்" என்று எத்தனையோ ஆயிரம் குடும்பங்கள் இயக்கத்தின் காலில் விழுந்து அழுதிருக்கின்றன. ஆனால், அவர்கள் மக்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால்தான் சாவு எண்ணிக்கை அதிகமானது.

"நீங்கள் எல்லாம் போங்கள்.... ராணுவமா, நாங்களா என்று பார்த்து கொள்கிறோம்" என்று புலிகள் எங்களையெல்லாம் வெளியே அனுப்பி, சவால் விட்டிருந்தால், அது வீரப் போராட்டமாக இருந்திருக்கும்.







இவ்வளவு மக்கள் அழிந்திருக்க மாட்டார்கள். அதே நேரம், போரும் எப்போதோ முடிந்து போயிருக்கும். ஆனால், புலிகள் வலுக்கட்டாயமாக, மக்களைத் தங்களுக்கு அரணாக வைத்திருந்ததால்தான், பல்வேறு நாடுகள் இலங்கை இராணுவத்திற்குப் பல உதவிகள் செய்த நிலையிலும், இந்தப் போர் இத்தனை ஆண்டுகள் நீடித்தது. மக்கள் அரண் இல்லாமல் போயிருந்தால், புலிகளை இலங்கை இராணுவம் எப்போதோ ஒடுக்கி இருக்கும்.

தங்கள் பிடியில் இருந்த பகுதி-களைச் சுற்றி புலிகள் கண்ணி வெடிகளைப் பதித்து விட்டனர். தங்கள் பகுதிகளில் புலிகளே வரிவசூல் செய்தனர். ஆனால், அரசாங்கம் அந்தப் பகுதியைச் சுற்றிலும் இராணுவத்தை நிறுத்தி வைத்துக் கொண்டு, அந்த இராணுவ வீரர்களுக்கு மட்டுமல்லாமல், புலிகள் பகுதியிலுள்ள எங்களுக்கும் உணவு அனுப்ப வேண்டும், அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் அனுப்ப வேண்டும் என்றால் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் செய்வார்கள்? பல தமிழர் அமைப்புகள் அரசியல் தீர்வை நோக்கி நகர்ந்தபோது, புலிகளும் அப்படி நகர்ந்திருக்க வேண்டும். இப்போது இராணுவத்தை மட்டும் குறை சொல்லிப் புலம்புவதில் அர்த்தமில்லை" என்றார் அவர்.

அவர் குடும்பத்தில் எல்லோருமே போரில் இறந்துபோன நிலையில், அவர் மட்டுமே தனிமையில் வசிப்பதாகச் சொன்னபோது கலக்கமாக இருந்தது.

**நாங்கள் புதுக்குடியிருப்பு நகரிலிருந்து முல்லைத் தீவு நோக்கிப் போகும் வழியில் ஒரு பகுதியில், புதுப் புது வீடுகள் காணப்பட்டதையொட்டி, அங்கு சென்று விசாரித்தோம். ஒரு வீட்டில் கணவன் இல்லாமல் இரு குழந்தைகளோடு ஒரு பெண் வசித்து வந்தார். அவரோடு பேசினோம்:**

"போர் நடந்த காலங்களில் இயக்கத்தில் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்று, பல வருடங்கள் நான் வீட்டை விட்டே வெளியே போகாமல் இருந்தேன். என் அம்மா ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்து எனக்குத் திருமணம் செய்து வைத்தார். திருமணம் ஆனதும் "எப்படா கர்ப்பிணி ஆவோம்" என்று ஆவலாகக் காத்திருந்தேன். ஏனென்றால், கர்ப்பிணி என்றால் நான் தைரியமாக வெளியே சென்று வரலாம். இயக்கத்தினர் பிடித்துச் செல்ல மாட்டார்கள். நான் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியும். அதே போல், கர்ப்பம் தரித்து நான்கு மாதங்களுக்குப் பிறகு வெளியே செல்ல ஆரம்பித்தேன். அப்போதும் இயக்கத்தினர் என்னைத் தடுத்து நிறுத்தி விசாரித்தனர். கர்ப்பிணி என்று நம்பிய பிறகுதான் அனுப்பி வைத்தனர்.

குழந்தை பிறந்த பிறகு கைக்குழந்தையுடன் வெளியே செல்வேன். பிரச்சினையிருக்காது. குழந்தை வளர, வளர குழந்தையை என் அம்மாவிடம் பிடுங்கிக் கொடுத்து விட்டு, என்னை மீண்டும் பிடித்துச் சென்று விடுவார்களோ என்ற பயம் வந்து விட்டது. இதனால், மீண்டும் கர்ப்பம் தரித்தேன். மீண்டும் சுதந்திரமாக வலம் வந்தேன். ஆனால், இயக்கத்தினர் என் கண-வரைத் தேடத் துவங்கி விட்டனர். இதனால் அவர் எங்கள் வீட்டிலிருந்து தப்பி ஓடி விட்டார். இன்று வரை அவர் என்னிடம் வரவில்லை" என்று கண் கலங்கினார்.

**இதன்பின், நாங்கள் முல்லைத் தீவுக்குப் போய் அங்கிருந்த தமிழர்கள் சிலரிடம் பேசினோம். கடைசி நாள் போர் குறித்து அவர்கள் வீவரித்தனர்:**

"முள்ளிவாய்க்கால் ப்குதியில் நாங்கள் புலிகளுடன் சிக்கிக் கொண்டோம். அவர்கள் எங்களை வெளியே அனுப்புவதாக இல்லை. இராணுவமோ புதுக்குடியிருப்புப் பகுதி வழியாகவும், முல்லைத்தீவு வழியாகவும் எங்களை நெருங்கி விட்டது. இருபுறம் இராணுவம். கீழ்புறம் கடல், மேல்புறம் நந்திக்கடல் காயல். எங்கும் தப்ப முடியாது. உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கையே போய் விட்டது. அந்த நேரத்தில் இலங்கை இராணுவம் எப்படியோ கடல்பகுதிக்கு முன்னேறி வந்து, அங்கிருந்தபடி புலிகளைத் தாக்கத் துவங்கியது. இதனால் நாங்கள் நந்திக்கடல் மீதான குறுகிய பாலத்தின் வழியாகத் தப்பி முல்லைத் தீவை நோக்கி ஓடி வந்தோம்.

"முதலில் எங்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்திய இராணுவம், பிறகு நாங்கள் பொதுமக்கள் என்பது தெரிந்ததும் நிறுத்திக் கொண்டது. பலர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பயந்து காயலில் விழுந்து தப்பிக்க நினைத்து உயிரிழந்தனர். பொதுமக்கள் வெளியேறியதும், இராணுவம் முழுமையாக அந்தப் பகுதிக்குள் புகுந்து போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. கடைசி நாள் போரில், புலிகளோடு சேர்ந்து நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இறந்து போனாலும், எங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான மக்கள் தப்பித்து இன்று உயிரோடு இருப்பது நம்ப முடியாத அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்" என்று விவரித்தார்கள் அவர்கள். அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்லும்போதே, அவர்கள் கண்களில் ஒருவிதமான பீதியைப் பார்க்க முடிந்தது.

**இதன் பின் நாங்கள், அந்த ஆம்புலன்ஸ் டிரைவரது குடும்பத்தைச் சந்தித்தோம். கணவன், மனைவி, இரு மகன்கள் அடங்கிய குடும்பம் அது. மூத்த மகன் இடது காலில் செயற்கைக் கால் பொருத்தியிருந்தார். அந்த டிரைவரிடம் பேச்சுக் கொடுத்தோம்:**

"நான் அரசு வைத்தியசாலையில் ஆம்புலன்ஸ் டிரைவராகப் பணியாற்றுகிறேன். பத்து வருடங்களுக்கும் மேலாக புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்தேன். போரில் காயம்படும் புலி-களை உடனுக்குடன் கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்ப்பது என் பணி. எத்தனையோ ஆயிரம் புலிகளை அப்படி நான் காப்பாற்றியிருக்கிறேன். எனக்கு இரு ஆண் குழந்தைகள், ஒரு பெண் குழந்தை. அந்தக் குழந்தைகள் வளர வளர, எனக்குப் பயம் வரத் துவங்கியது. இயக்கத்தினரிடம் சென்று என் குடும்பத்தை வெளியே அனுப்பி விடுமாறு கெஞ்சினேன். நான் அவர்களுக்குச் செய்த உதவிகளை நினைத்து அவர்கள் மனமிரங்குவார்கள் என்று நம்பினேன். ஆனால், அவர்கள் உடன்படவில்லை.

அதன் பின் கொஞ்ச நாள் கழித்து மீண்டும் அவர்களிடம் "நான் இங்கு இருந்து உங்களுக்கு ஊழியம் செய்கிறேன். என் மனைவி, குழந்தைகளை மட்டும் வெளியே அனுப்பி விடுங்கள்" என்று கெஞ்சினேன். அதற்கும் அவர்கள் சம்மதிக்கவில்லை. மாறாக, என் கழுத்தில் துப்பாக்கியை வைத்து அழுத்தி, "உயிர் மேல் உனக்கு அவ்வளவு ஆசையா?" என்று மிரட்டினார்கள். அதன் பின் ஒருநாள் விமானப் படைத் தாக்குதல் சமயத்தில், பதுங்கு குழியில் என் மனைவியும், குழந்தைகளும் ஒளிய நேர்ந்தபோது, மண் சரிந்து விட்டது. என் மகள் உயிரோடு மண்ணில் புதைந்து இறந்து போனாள்" என்று

கண் கலங்கியபடி, தனது செல்.. போனிலிருந்த தனது மகளின் வால்பேப்பர் போட்டோவைக் காட்டினார்.

"மீண்டும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு இயக்கத்தினரிடம் போனேன். நான் இறுதி வரை உங்களோடு இருக்கிறேன். தயவு செய்து என் குடும்பத்தை மட்டும் வெளியே அனுப்பி விடுங்கள் என்று கெஞ்சினேன். அவர்கள் என்னைப் பலவந்தமாகத் துரத்தியடித்தனர். அதோடு மறுநாளே என் வீட்டிற்கு வந்து, என் மூத்த மகனைப் பார்த்து விட்டு, அவனைத் தங்களோடு அழைத்துச் சென்று விட்டனர். நானும் என் மனைவியும் அவர்கள் காலில் விழுந்து கெஞ்சினோம். இப்போதுதான் ஒரு மகளை இழந்திருக்கிறோம். என் மகனை விட்டு விடுங்கள் என்று கெஞ்சியபோது, மறுபடியும் துப்பாக்கியைக் கழுத்தில் வைத்து மிரட்டி விட்டுச் சென்றனர். நாங்கள் அழுதபடியே வீட்டில் இருந்தபோது, என்னை வலுக்கட்டாயமாக அம்புலன்ஸ் ஓட்ட அழைத்துச் சென்று விட்டனர். இயக்கத்துக்குப் போன என் மகன் ஓரிரு நாளில் தப்பி வந்து விட்டான். ஆனால், அவனை நாங்கள் ஒளித்து வைக்கும் முன்பாகவே, மீண்டும் வந்து பிடித்துக் கொண்டு போய் விட்டனர்.

அடுத்த முறையும் அவன் தப்ப முயன்றிருக்கிறான். அப்போது கோபமாகி அவன் காலில் சுட்டு விட்டனர். முழங்காலுக்குச் சற்று மேலே பாய்ந்த குண்டு மறுபுறமாக வெளியே வந்து விட்டது. நானே என் மகனை எனது அம்புலன்ஸில் மருத்துவமனைக்குக் கொண்டு வர வேண்டியதாகி விட்டது. அப்போது இலங்கை அரசின் ரெட்க்ராஸ் கப்பல் முல்லைத் தீவிற்கு அடிக்கடி வரும். காயம்பட்டவர்களை அதில் எடுத்துக் கொண்டு போவார்கள். என் மகன் சுடப்பட்ட நேரத்தில் ரெட்க்ராஸ் கப்பல் வந்ததால், என் மகனை அவர்களிடம் ஒப்படைக்கச் சொல்லி இயக்கத்தினரிடம் மன்றாடினேன். ஆனால், அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. "புல்லட் தான் வெளியே வந்து விட்டதே? பிறகென்ன? இங்கேயே வைத்தியம் பார்த்துக் கொள்ளலாம்" என்று கூறி விட்டனர். ஆனால், இங்கே பார்த்த வைத்தியம் கைகூடவில்லை. உள்ளே நரம்புகள் அழுகிப் போனதாகக் கூறி, ஓரிரு நாட்களில் அவனது காலையே வெட்டி எடுத்து விட்டார்கள்.


நான் அழுது ஆர்ப்பாட்டம் செய்தேன். அதன் பிறகு எனது மனைவியையும், எனது இளைய மகனையும் மட்டும் கப்பலில் அனுப்பி வைக்கச் சம்மதித்தனர். அவர்கள் வெளியேறினார்கள். போரின் இறுதி கட்டத்தில்தான் நான் என் மூத்த மகனைத் தூக்கிக் கொண்டு ரிஸீவிங் பொயின்ட்டிற்கு ஓடி இராணுவத்திடம் தஞ்சம் புகுந்தேன். விடுதலைப் புலிகள் மாதிரி அரக்கர்களை உலகில் எங்கும் பார்க்க முடியாது. அவர்கள் தலைமையில் ஒரு தனி நாடு அமைந்திருந்தால், அதுதான் உலகத்திலேயே கொடூரமான நாடாக அமைந்திருக்கும்" என்றார் அந்த அம்புலன்ஸ் டிரைவர் ஆக்ரோஷமாக. "தோற்கப் போகிறோம் என்று உணர்ந்த நாள் முதலே, அவர்கள் மிருகத்தனமாக மாறி விட்டார்கள்" என்றார் அவரது துணைவியார். அந்தக் காலை இழந்த இளைஞன் இன்னமும் மன அதிர்ச்சியிலிருந்து முழுமையாக மீளவில்லை.

இப்படித்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக, வட மாகாணத்தின் பல பகுதிகளில் பல சோகக் கதைகள் வெடித்து வருகின்றன. ஆனால், இந்த உண்மைகளை முதலில் உள்வாங்கிக் கொள்ள மறுக்கும் சிலர், உடனே "அப்படியானால் இலங்கை இராணுவ வீரர்கள் எல்லாம் உத்தமர்களா?", "ராஜபக்ஷ என்ன மகாத்மாவா?" என்றுதான் அவசர அவசரமாகக் கேள்வி எழுப்புகிறார்கள்.

(துக்ளக் நிருபர்கள் எஸ்.ஜே.இதயா, ஏ.ஏ.சாமி)

# சின்னச் சின்ன...

பாலைவன எலிகள் பகல் முழுவதும் வளைக்குள் ஓய்வெடுத்து, இரவில் சூரிய வெப்பம் தணிந்த பிறகு பாலைவனத்தில் இரை தேட ஆரம்பிக்கும். இதன் உடலில் வியர்வை உண்டாவதில்லை. மிகச் சிறிய அளவில் சிறுநீர் வெளியேற்றும். இவ்வகை எலிகள் 3 ஆண்டுகள் வரை தண்ணீர் குடிக்காமல் உயிர்வாழும் ஆற்றல் உள்ளவை.



• சுறா மீனுக்கு உடலினுள் நீந்து பை கிடையாது. எனவே இதனால் ஓரிடத்தில் நிலைத்து மிதக்க முடியாது. இது உயிரோடு இருக்க வேண்டுமானால் காலம் முழுவதும் ஓரிடத்தில் கூட நிற்காமல் நீந்திக் கொண்டே இருக்க வேண்டும். ஆயுள் முழுவதும் நீந்திக் கொண்டே இருக்கும் மீன் சுறாமீன் ஒன்றுதான்.

பூனைகள் சாதாரணமாக "மியாவ்" என்று கத்துவது போல் தோன்றினாலும் அவ்வொலியில் நூற்றுக்கும் மேற்பட்ட வித்தியாசங்கள் இருக்கின்றன. அதன் ஒவ்வொரு சப்தத்திற்கும் ஒவ்வொரு அர்த்தமுண்டு. பூனைகள் நம்முடைய நூற்றுக்கணக்கான வார்த்தைகளுக்கு அர்த்தம் புரிந்து கொள்ளும் சக்தி வாய்ந்தவை.

ஆள்காட்டிக் குருவிகள் மனிதர்களை கண்டால் மட்டுமே பயங்கரமாக அலறி, கூச்சலிடும். இதனால், மனிதர்கள் வருவதை அறிந்து, வனவிலங்குகள் மறைவிடம் தேடி ஓடி விடும். இரவிலும், பகலிலும் இப்படி ஆளை காட்டிக் கொடுக்கக்கூடிய இந்தக் குருவியை, பழங்கால அரசர்கள் பிடித்து கூண்டில் அடைத்து, தங்களது கோட்டைக்கு சற்று தள்ளி வைத்து விடுவர். எதிரிகளோ, ஒற்றர்களோ ரகசியமாக மறைந்து வந்தால்கூட இந்தக் குருவிகள் உரக்கக் கத்தி, காட்டிக் கொடுத்து விடும்!

தும்பிகளின் கண்கள் மற்றப் பூச்சிகளின் கண்களைவிட அளவில் பெரிதாக இருக்கும். அதனால் அதன் பார்வை சக்தி அதிகம். தும்பியின் கண்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 30,000 லென்ஸ்கள் அமைந்துள்ளன. நமக்கெல்லாம் ஒரு கண்ணில் ஒரே ஒரு லென்ஸ் மட்டுமே உண்டு. பூச்சி இனத்திலேயே மிக வேகமாகப் பறக்கக்கூடியதும் தும்பிதான். இது மணிக்கு சுமார் 58 கி.மீ. வேகத்தில் பறக்கும்.

வீட்டு ஈக்களுக்கு வாய் கிடையாது. அவை ஒரு குழாய் போன்ற அமைப்பின் மூலம் உணவை உறிஞ்சியே உண்ணுகின்றன. உணவின் மீது எச்சில் போன்றதொரு திரவத்தைத் துப்பி உணவை மென்மையானதாக மாற்றும். உணவு திரவ வடிவை எட்டியதும் அப்படியே அந்தக் குழாய் வழியே உறிஞ்சிச் சாப்பிடும். இதனால்தான் ஈ மொய்த்த பண்டத்தை உண்ணக்கூடாது என்கிறார்கள்.

# அஜந்தா!



அஜந்தா என்றவுடன் நம் நினைவுக்கு வருவது குகைக்கோயில்கள்தான். ஜோன் ஸ்மித் என்ற ஆங்கிலேய அதிகாரி, 1819 இல் தனது நண்பர்களுடன் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றபோது அடர்ந்த மரங்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்த 30 குகைக் கோயில்களைக் கண்டுபிடித்தார்.

மகாராஷ்டிராவில் வகோரா நதியை ஒட்டி, இயற்கையாக அமைந்துள்ள குன்றுகளில் இந்தக் கோயில்கள் அமைந்துள்ளன.

புத்தரின் பெருமையைப் பேசும் சிற்பங்களும் வண்ணச் சித்திரங்களும் உள்ளே உள்ளன. இவை பார்ப்பதற்கு பிரமாண்டமாகவும் வியப்பூட்டுவதாகவும் இருக்கும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த கலாசாரம், கலைத்திறமை, புழக்கத்திலிருந்த அணிகலன்கள், உடை அலங்காரங்கள், இசைக் கருவிகள் எல்லாவற்றையும் இக்குகை ஓவியங்களிலும் சிற்பங்களிலும் காணலாம்.




# உங்கள் கனவு பலிக்கிறதா?

❖ வானில் நிலவைப் பார்ப்பது போன்று கனவு வந்தால் கணவன், மனைவி இடையே அன்பு பெருகும்.
❖ ஏராளமான நட்சத்திரங்கள் தோன்றினால் பதவி உயர்வு வந்து சேரும்.
❖ விவசாயி நிலத்தை உழுவது போன்று கனவு வந்தால் பதவி, பணம், செல்வாக்கு உயரும்.
❖ இறந்தவர் சடலம் கனவில் வந்தால் சுபநிகழ்ச்சிகளுக்கு ஏற்ற சூழல் வரும்.
❖ ஆசிரியர் பாடம் நடத்துவது போன்று கனவு தோன்றினால் நினைத்தது எல்லாம் நடக்கும்.
❖ சிறு குழந்தைகளைக் கண்டால் நோயில் இருந்து நிவாரணம்.
❖ இறந்தவருடன் பேசுவது போன்று கனவு வந்தால் அதிகாரம், பதவி வந்து சேரும்.

('கனவுகளின் பலன்கள்' நூலில்)

# சங்ககாலச் சாராயம்

சங்க காலத்திலேயே சாராயத்தில் பலவகை இருந்துள்ளது. அக்காலத்தில் "அடுகள்" என்ற பெயரில் சாராயம் புழக்கத்தில் இருந்திருக்கிறது. பல வகைப் பழங்களை ஊறலாக்கி, அதை வடித்து, சாராயம் குடிக்கும் பழக்கம் 17ஆம் நூற்றாண்டில் தமிழர்களிடம் இருந்துள்ளது...




"விறலி விடு தூது" புத்தகத்தில் இத்தகவல் உள்ளது... "சாரம்" என்பதுதான் திரிந்து சாராயம் ஆகியதாம்...

பிரண்டி, விஸ்கி எல்லாம் ஒல்லாந்தர் வருகையுடன்தான் இங்கே வந்தது. அதற்கு முன்பே கருப்பட்டி, வெல்லம், பேரீச்சம்பழம், வாழைப்பழம், தேங்காய், பனை, தென்னையிலிருந்து வடிக்கப்படும் கள், அரிசி ஊறல், கரும்புச்சாறு இவற்றையெல்லாம் ஊற வைத்து இங்கே சாராயம் காய்ச்சியிருக்கிறார்கள்.

பட்டைச் சாராயம் என்பது என்ன தெரியுமா? பழவகை, இனிப்புகளை போட்டு, அந்த ஊறல் நாற்றமெடுத்து, சுவை கெட்டுப் போகாமல் தடுக்க, ஊறலோடு, கருவேலம்பட்டை, வேப்பம்பட்டை போன்ற மரப்பட்டைகள் சேர்த்துப் போடுவார்களாம்... அதனால் தான் இது பட்டைச் சாராயம் ஆனதாம்... தேங்காய்ச் சாராயமும், பட்டைச் சாராயமும் உயர்ந்த சரக்குகளாக கருதப் பட்டுள்ளன. இலுப்பைப் பூவை ஊற வைத்து இலுப்பைச் சாராயமும் செய்திருக்கிறார்கள்.






வாரமொரு கிராமம்

# தெல்லிப்பளைக் கிராமமும் தெவிட்டாத பக்திநெறிவாழ்வியலும்

**யாழ்.**குடாநாட்டிலே மண்வளமும், மனவளமும் நிறைந்த ஓர் இடமாக தெல்லிப்பளைக்கிராமம் விளங்குகின்றது. இப்பகுதி திருக்கோவில்களினாலும், கல்விக்கூடங்களினாலும், பண்பாட்டு நலன் மிக்க மக்கள் வாழ்விடங்களினாலும் சிறப்புப்பெற்று விளங்குகின்றது. இலட்சுமி கடாட்சத்தை எடுத்துக்காட்டுகின்ற வெற்றி




லைச் செடிகளும், பண்பாட்டு விழுமியங்களைப் பேணுகின்ற நிறைகுட வாசல்களும் நிறைந்த பூமியிது. அத்துடன் சிறந்த நமக்காரர்களினாலும், உயர்ந்த மங்கலவாத்திய கலைஞர்களினாலும் சிறப்புப்பெற்ற இடம் இது. நவநீத கிருஷ்ணபாரதியார், புலவர் மகாலிங்கசிவம், எழுத்தாளர் சண்முக சுந்தரம், பல்துறைப் புலவர் மாவை சச்சிதானந்தன், கவிஞர் கதிரேசபிள்ளை மகாகவி உருத்திரமூர்த்தி தவில் வித்துவான் தட்சணா மூர்த்தி ஆகிய மகான்களை பெற்றெடுத்த பிரதேசங்களின் மத்தியில் பெருமை சேர்க்கும் இடமிது. அந்தண சிரேஷ்டர்களினாலும் வளம் பெற்ற இடமிது என்பதை இன்நாடும் ஏடும் நன்கறியும்.

### ஊரும் பேரும்

தெல்லி + பளை = தெல்லிப்பளை என சேர்ந்த சிறப்புப்பெயர் கொண்ட இக்கிராமம் தெல்லி என்கின்ற தலைவனின் கீழ் இருந்த பூமியாதலால் தெல்லிப்பளை எனப் பெயர் பெறலாயிற்று மாருதப் புரவீகவல்லி தன்குதிரைமுகம் மாறப் பெற்றுத் தங்கி இருந்த இடம் தெல்லிப்பளையாகும் இது பல உட்கிராமங்களையும் கொண்டுள்ளது பல கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டது.

### ஆலய மகிமை

இது துர்க்காபுரம் எனுமிடத்தில் ஜே/229 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் எனும் பெயரைக் கொண்ட இவ்ஆலயம் 250 ஆண்டுகளிற்கு முன் உழுகுடைப்பகுதி வவுணாவத்தையை சேர்ந்த கதிர்காமர் என்ப

வரால் 1760 ஆம் ஆண்டளவில் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் நிலப்பகுதியில் இருந்து இலுப்பைத் தோப்பு மரத்தடியில் காசி செப்பனேஸ் வரி பீடத்தில் இருந்து பெறப்பட்டதாக கருதப்படும் (துர்க்கா சக்கரம்) வழி பாடு ஆரம்பமானது. நாகநாத உடையார் என்பவர் ஒருசிறிய ஆலயத்தை அமைத்து காஞ்சிபுரத்தில் இருந்து வந்த அந்தணப்பெருமகனாரை அர்ச்சகராக நியமித்து நித்திய நைமித்தி



யங்களை நடைமுறைப்படுத்தினார். 1820இல் கோவில் புனரமைப்புச்செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவாகியது.தனி முகாமையில் இருந்த இவ் ஆலயம் 1948இல் 11 பேர்கொண்ட தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 1965இல் 18 பேர் கொண்ட நிர்வாக சபையொன்று தெரிந்து பரிபாலனத்தை அதனிடம் ஒப்படைத்தனர்.. 1977 ஜனவரி 27இல் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பரிபாலன சபைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டார். தற்போது கலாநிதி ஆறு. திருமுருகன் பரிபாலன சபைத் தலைவராக இருந்து இவ் ஆலய செயற்பாட்டை சிறப்பாக முன் நகர்த்தி வருகின்றார்.

### தொண்டு நிறுவன செயற்பாடு

ஸ்ரீ துர்க்காதேவஸ்தான இந்து இளைஞர் சபை, தெல்லிப்பளை பிரதேச சாரணபடைப்பிரிவு, முதலுதவி படைப்பிரிவு, கிராம அபிவிருத்தி இளைஞர் மன்றம், றொட்றிக்கழகம், லயன்ஸ கழகம், போன்றனவும் கிராம அபிவிருத்தி தொடர்பாக பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன விளையாட்டுக் கழகங்கள் பிரதேச மட்டப் போட்டிகளை உருவாக்கி பல சாதனைகளை வருடம் தோறும் நிகழ்த்தி வருகின்றன.

### ஆளணி உருவாக்கப்பெருமை

கிராமங்கள் தன்நிறைவு பெறவேண்டும் அதன் நகர மயமாக்கலில் நாடு சிறப்புப் பெறவேண்டும். ஒவ்வொருகிராமங்களிற்கு தனிப்பெரும் பெருமையுண்டு. தன்னிகரற்ற தன்மையுண்டு. அந்த வகையில் அதன் பெருமைகளை வெளிக்கொணரும் நோக்குடன் தினமுரசுப் பத்திரிகை "வார மொரு கிராமம" எனும் சமூக பக்கத்தை வெளியிட்டு வருகின்றது. அந்தவகையில் இத்தெல்லிப்பளைப்பிரதேசம் மிகப்பிரசித்தி பெற்றஇருபாடசாலைகளை தன்னத்தே கொண்டுள்ளது. மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன்கல்லூரி இவை 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஆங்கிலேயரால் ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரிகளாகும். தன்னிகரற்ற தனித்தன்மை கொண்ட இக் கல்லூரிகள் தேசியமட்ட சாதனைகளை தனதாக்கிக் கொண்டு பல தலைவர்களையும்


கல்விமான்களையும் சமூகத்திற்குத்தந்த கல்லூரிகளாகும். நல்லை நகர் நாவலரின் சுதேசிகளான தமிழர்கள் தமக்கு தம்முடைய பண்பாட்டிற்கான ஒரு பாடசாலையை உருவாக் குங்கள் என விடுத்த வேண்டுகோளிற்கு அமைய நாவலருகுப்பின் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் மகாஜனாக் கல்லூரியினைத்



தோற்றுவித்தார். நூற்றாண்டு விழா கண்டுள்ள மகாஜனாக் கல்லூரி பல வைத்திய கலாநிதிகளை, விரிவுரையாளர்களை பொறியியலாளர்களை ஆசிரியர்களை தந்துள்ளது.

### வைத்தியத் துறைசார் விருத்தி

வேறுபிரதேசங்களைவிட கூட்டுறவு வைத்தியசாலை சிறப்பாக இயங்கிய பெருமை தெல்லிப்ளை கூட்டுறவு வைத்திய சாலைக்கே உரியது போரின் அனர்த்தங்களிற்கு முன் முன்னணி வைத்தியசாலையாக இது விளங்கியுள்ளது. முன்பொருகாலத்தில் காங்கேசன் துறையில் இயங்கிய அரசினர் வைத்தியசாலை



சிமெந்துத் தொழிற்சாலையின் தூசு காரணமாக இடமாற்றப்பட்டு தெல்லிப்பளையில் கட்டப்பட்டது. இது யாழ். போதனா வைத்திய சாலையாக குடாநாட்டில் விளங்குகின்றது. புற்று நோயாளிகளிற்கு சிகிச்சையளிக்கும் ஓர் சிறந்த வைத்திய சாலையாக இது விளங்குகின்றது. தற்போது இதில் "ரேடி யேசன்" எனும் கதிர்வீச்சு சிகிச்சை பாரிய இலத்திரனியல் கருவி கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வட மாகாணத்திலே தெல்லிப்பளை அரசினர் வைத்திய சாலையில் மாத்திரமே இச்சிகிச்சை இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழர்களின் தன்னிகரற்ற தலைவன் எனப் போற்றப்படும் S.T.V. செல்வநாயகமவர்கள் வாழ்ந்த பூமி தெல்லிப்பளை, யாழ்.பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தரும், மரபுக் கலையை படித்த மக்கள் மத்தியில் கொண்டுவந்த பெருமைக் குரியவருமான சு. வித்தியானந்தர் வாழ்ந்த இடம் தெல்லிப்பளை வீமன் காமம் ஆகும். இவ்வாறான பெருமைக்கும் பெயர்சொல்லி வாழ்த்துவதற்கும் உரித்துடைய பெரும் கிராமமாக தெல்லிப்பளை விளங்குகின்றதென்றால் அது மிகையாகாது.



# மல்லாவி நீர் விநியோகத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது



(மல்லாவி)

மல்லாவி நீர் விநியோகத் திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டது. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன், வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண டனர்.

மல்லாவி நீர் விநியோகத்திட் டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை 192.2 மில்லியன் ரூபா ஆகும். பயனாளிகள் தொகை 4,500 ஆகும். இத்திட்டத்தினது வேலைகள் வைகாசி மாதம் 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட் டன. மல்லாவி நீர் வழங்கல் திட்டமானது துணுக்காய், மல்லாவி, யோகபுரம் மத்தி, அனிஞ்சியன்குளம், தேறாங் கண்டல் மற்றும் திருநகர் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளை உள் ளடக்கியதாகும்.

இத்திட்டமானது 225 கன மீற்றர் கொள்ளளவுடைய நீர்த்தாங்கி, அலுவலகம் மற்றும் களஞ்சிய அறை, பம்பி அறைகள், விடுதி அத்துடன் 31Km நீளமான நீர்க் குழாய்களையும் உள்ளடக்கியதாகும். இத்திட்டத் திற்குத் தேவையான நீரானது மல்லாவியில் உள்ள ஒரு ஆழம் அறியப்படாத கிணறு மற்றும் இரண்டு குழாய்க்கிணறுகளில் இருந்தும் தேறாங்கண்டல், அனிஞ் சியன்குளத்திலுள்ள இரண்டு குழாய்க் கிணறுகளில் இருந்தும் பெறப் படுகின்றது.

வவுனியா மாவட்ட பிராந் திய ஆணையாளர் ஐ.எஸ்.எம். மொகைதீன், தேசிய நீர்வழங் கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் டுலிப் குணவர்த் தன, தேசிய நீர்வழங்கல் வடி காலமைப்புச் சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் பி.தவேந திரகுமார் ஆகியோர் இந்நிகழ் வில் கலந்து கொண்டனர்.

## பொதுமண்டபம் திறக்கப்படுமா?

(அச்சுவேலி)

வளலாய் பகுதியில் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தின் கட்டடப் பணிகள் யாவும் நிறைவடைந்த நிலையில் இது வரையில் அது திறப்பு விழாக் காணாத நிலை யில் உள்ளதாக அப்பகுதி மக் களால் கவலை தெரிவிக்கப்படு கிறது.

எனவே,சம்பந்தப்பட்டவர்கள் இதனை விரைவில் திறந்து மக்களின் பாவனைக்கு விடு மாறு சமூக ஆர்வலர்களும் பொது மக்களும் கோரிக்கை விடுக்கின் றனர். (85)

# வீதி அகலிப்பு பணிகளுக்காக மின்சார விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று வெள்ளிக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் மூளாய், வட்டுக்கோட்டை, பொன்னாலைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

நாளை சனிக்கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் மல்லாகம், அளவெட்டி, சிறுவிளான், விளான், பன்னாலை, காரை நகர், ஊர்காவற்றுறை, தீவகம் முழுவதும், மானிப் பாய் ஈஞ்சை வைரவர் கோவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக் கும்.

மேலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 08.30 மணியிலிருந்து மதியம் 12.30 மணிவரையும் கரந்தன், நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வி யன்காடு, உரும்பிராய், கோண்டாவில், மருத்து வபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட் டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களிலும், இதே நாள் காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை கல்வியன்காடு, நல்லூர், அரியாலை, செம் மணிப் பிரதேசங்களிலும்

4ஆம்திகதி செவ்வாய்க்கிழமை 08.30 மணியி லிருந்து மாலை 05.30 மணிவரையும் மானிப்பாய் ஈஞ்சை வைரவர் கோவில் பிரதேசம்ஆகிய இடங் களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். என யாழ். பிரதேச மின்பொறியிலாளர் அறிவித் துள்ளார்.

## வெள்ளி நற்சிந்தனை...



## இலட்சிய மனிதன் எப்படி இருப்பான்?

சௌகரியத்துக்கான தர்மத்தின் விதிகளை யாரும் மாற்றி அமைத்துக்கொள்ள முயலக் கூடாது. தேவைகளுக்காக நியாய வரம்புகளை மீறுவது முறையல்ல. ஒழுக்க சீலர்கள் இம்மா திரிச் செயல்களில் ஈடுபடமாட்டார்கள். அவர் களைப் பொறுத்த வரையில் கடமைதான் பிரதா னம். மற்றைய எல்லாம் இரண்டாம் பட்சம் தான். கடமைக்கு அவர்கள் காட்டும் மரியாதையே மற்ற வர்களிடமிருந்து மேலானவர்களாக அவர் களை உயர்த்தி விடுகிறது.

மகாபாரதக்கதை ஒழுக்கக் கோட்பாட்டின் உன்னதமான தொகுப்பாகும். சாதாரணமாக, பலர் சந்தர்ப்பவாதிகளாக இருந்து கஷ்டத்தில் தங்களுக்கு நன்மை செய்கின்றவர்களை மறந்து, எங்கே செல்வமும் செல்வாக்கும் கிடைக்கின் றதோ அங்கே போய்விடுவார்கள்.

ஆனால் பாரதக் கதையில் கர்ணன் நன்றி மறவாமைக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றான். குந்தி அவனுக்குத் தானே தாய் என்பதனை வெளிப்படுத்துகின்ற போதும், துரியோதனனைத் துறந்து விட்டுப் பாண்டவர் களிடமவந்து சேர மறுத்து விடுகிறான். தனக்கு வாழ்வளித்த துரியோதனனுக்கு எதிராகச் செயற் பட அவன் சம்மதிக்கவில்லை.

பாசத்துக்கும் கடமைக்கும் இடையே போராட் டம் வருகிற போது, பீஷ்மர் கடமையின்பக்கமே நின்று. குருஷேத்திரப் போரில் தன்னுடைய பங்கை நிறைவேற்றுகிறார். திட்டத்துாய்மன் தன்னைக் கொலவதற்காகவே பிறப்பெடுத்தவன் என்பது தெரிந் தும் துரோணர் அவனுக்குக் குருவாக இருந்து வில்வித்தை கற்றுக்கொடுத்து தன்னுடைய கடமையை நிறைவேற்றுகிறார்.

ஒரு இலட்சிய மனிதன் யார் என்பதற்கு கிருஷ்ண பரமாத்மாவே இலக்கணம் சொல்லியி ருக்கிறார். "ஸ்திரப் பிரகஞா" என்ற சொல்லுக்கு, கீதையில் விளக்கம் சொல்லும் போது இதைத் தெளி வுபடுத்துகிறார். இரக்கம், பணிவு, அன்பு, அமைதி ஆகிய குணங்களைப் பெற்றிருப்பதோடு, ஒரு இலட்சிய மனிதன் தனக்கு தீமை செய்தவர்களி டத்தும் தன்னுடைய புகழுக்கு மாசு கற்பித்தவர் களிடமும் கூட விரோத உணர்வு பாராட்டுவதில்லை; தீய எண்ணம் கொள்வதில்லை.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**



# 2013 - 2014 குரு பெயர்ச்சி பலன்கள்

நிகழும் விஜய வருடம், வைகாசி மாதம் 14 – ஆம் திகதி, செவ்வாய்க் கிழமை (28.5.13) கிருஷ்ண பட்சத்து சதுர்த்தி திதி, மேல்நோக்கு உள்ள உத்திராட நட்சத்திரம், ஏழாம் ஜாமத்தில், உத்தராயண புண்ணிய கால வசந்த ருதுவில், இரவு 9.15 மணிக்கு பிரகஸ்பதி எனும் குரு பகவான் ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிக்குள் சென்று அமர்கிறார். 12.6.14 வரை இங்கு அமர்ந்து தனது கதிர் வீச்சை செலுத்துவார்.

எந்த ஒரு கிரகமும் நீசம் அடையாத, அனைத்து கிரகங்களும் நட்பு பெறும் நடுநிலை வீடான புதன் கிரகத்தின் மிதுனத்தில் குருபகவான் அமர் வதால், அனைத்து ராசியினருக்கும் மத்திம பலன்களே கிடைக்கும். அதாவது, நற்பலன்கள் பெறப்போகும் ராசிக்காரர்களுக்கும் அளவாகவே நல்லது நடக்கும். அதேபோல், கெடு பலன்கள் ஏற்படப் போகும் ராசிக்காரர்களுக்கும் பாதிப்புகள் குறைவாகவே இருக்கும்.

சமாதான வீட்டில் குரு அமர்ந்தாலும் உலகெங்கும்... பொறுப்பற்ற பேச்சு – செயறபாடுகளால் சண்டை – சச்சரவுகள் அதிகரிக்கும். வடக்கு மூலைக்கு அதிபதியான புதனின் வீட்டில் தென்னக கிரகமான குரு அமர்வதால், பூமியில் வடக்குப் பகுதியில் இருப்பவர்களும், தெற்குப் பகுதியில் வாழ்பவர்களும் மோதிக்கொள்வார்கள். புதிதாக வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வெளியாகும். 28.5.13 முதல் 12.6.14 வரையிலும் ஊடகங்களின் காலம் என்றே சொல்லலாம். வித்யாகாரகன் புதனின் வீட்டில் குரு அமர்வதால், கல்விமுறையில் பல மாற்றங்கள் வரும்.

குரு 5 – ஆம் பார்வையால் சனியையும் ராகுவையும் பார்ப்பதால் விலைவாசி ஓரளவு குறையும். தங்கம், வெள்ளி முதலான ஆபரணங்களின் விலை வீழ்ச்சியுறும் என்றாலும், 19.8.13இற்குப் பிறகு, அவற்றின் விலை அதிகரிக்கும். எரிபொருட்களின் விலையும் சரியும். வாகன உற்பத்தி அதிகரிப்பால் வாகனங்களின் விலையும், இலத்திரனியல் பொருட்களின் விலையும் குறையும். பாடப்புத்தகங்களின் விலை உயரும். அயல்நாட்டில் இருப்பவர்களில் பலர் தாய்நாடு திரும்புவர். 2ஆவதாக திருமணம் புரிவது அதிகரிக்கும்.

புத்திரகாரகன் குரு, பகை கிரகமான புதனின் வீட்டில் அமர்வதால், கர்ப்பிணிகள் பாதிப்படைவர். குறிப்பாக 7ஆவது மாதத்தில் இருந்து பாதிப் புகள் அதிகரிக்கும். குழந்தையின்மை அதிகமாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் இல்லாமையால் பாரம்பரிய குடும்பங்கள் நலிவடையும்.

தனகாரகன் குரு மிதுனத்தில் அமர்கிறார். எனவே, மத்திய வங்கி அங்கீகரிக்காத நிதி நிறுவனங்களில் முதலீடு செய்ய வேண்டாம். சீட்டுத் திட்டங்களிலும் சேர வேண்டாம். அ, க, – (கி,ரி,பி) ஆகிய எழுத்துக் களில் தொடங்கும் ஊர்கள், மாவட்டங்கள், நாடுகள் மற்றும் நிறுவனங்கள் பாதிப்புக்கு உள்ளாகும். மேற்கண்ட எழுத்துக்களை முதல் எழுத்தாகக் கொண்டவர்கள் ஆரோக்கியத்திலும் பண விஷயத்திலும் கவனமாக இருக்கவேண்டும்.

குருப்பெயர்ச்சியால் தென்மேற்கு பருவ மழை அதிகரிக்கும். பசு – கன்றுகள், பயிர் – பச்சைகள், தோட்டங்கள் வளம் அடையும். வன விலங்குகளும் அபிவிருத்தியாகும். மின் தட்டுப்பாடு குறையும். கள்ளப் பணம் தயாரிப்பவர்கள் கையும் களவுமாகப் பிடிபடுவர்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

28.5.13 – 11.6.13 வரை மிருகசீரிடம் 3இல்
2.6.13 – 25.6.13 வரை மிருகசீரிடம் 4இல்
26.6.13 – 10.7.13 வரை திருவாதிரை 1இல்
11.7.13 – 25.7.13 வரை திருவாதிரை 2இல்
26.7.13 – 9.8.13 வரை திருவாதிரை 3இல்
10.8.13 – 28.8.13 வரை திருவாதிரை 4இல்
29.8.13 – 17.9.13 வரை புனர்பூசம் 1இல்
18.9.13 – 19.10.13 வரை புனர்பூசம் 2இல்
20.10.13 – 12.11.13 வரை புனர்பூசம் 3இல்
13.11.13 – 30.11.13 வரை புனர்பூசம் 3இல் வக்ர நிலை
1.12.13 – 2.1.14 வரை புனர்பூசம் 2இல் வக்ர நிலை
3.1.14 – 26.1.14 வரை புனர்பூசம் 1இல் வக்ர நிலை
27.1.14 – 11.3.14 வரை திருவாதிரை 4இல் வக்ர நிலை
12.3.14 – 12.4.14 வரை திருவாதிரை 4இல் இயல்பு நிலை
13.4.14 – 6.5.14 வரை புனர்பூசம் 1இல்
7.5.14 – 25.5.14 வரை புனர்பூசம் 2இல்
26.5.14 – 12.6.14 வரை புனர்பூசம் 3இல்

**பரிகாரம்:**

குரு பகவான் சுய கௌரவம், தன்மானம், விடாமுயற்சி, கல்வி, நுண்ணறிவு மற்றும் ஊடகங்களுக்கு உரிய கிரகமான புதனின் வீட்டில் அமர்கிறார். எனவே, மற்றவர்களைச் சார்ந்திருக்காமல் சுய முயற்சியிலும் உழைப்பிலும் முன்னேறப் பாருங்கள். பண வசதி இல்லாதவர்களின் உயர் கல்விக்கு உதவுங்கள் குருவின் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்கும்.

(தொடரும்...)

# தொற்றா நோய்களைத்தடுப்பதற்கு சீனி, உப்பு பாவனையில் குறைப்பு

## விரைவில் வருகிறது சுற்றறிக்கை

(கொழும்பு)

தொற்றா நோய்கள் அதிகரித்துச் செல்வதால் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் இலங்கையில் தனிநபர்களின் நாளாந்த சீனி மற்றும் உப்பு நுகர்வு அதிகரித்துக் காணப்படுவதாகவும் எனவே அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய விசேட சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்பட உள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் பாலித மஹீபால தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு எதிர்வரும் ஜுன் மாதத்தை தேசிய போஷாக்கு மாதமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. இதன் நிமித்தம் சுகாதார அமைச்சின் சுகாதார கல்விப் பணியகம் ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் டொக்டர் பாலித மஹீபால தொடர்ந்தும் குறிப்பிடுகையில், "சரியான போஷணை மூலம் ஆரோக்கியமான வாழ்வு" என்ற தொனிப் பொருளைக் கொண்டதாகவே இவ்வருட தேசிய போஷாக்கு மாதம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. இக்காலப்பகுதியில் சரியான போஷாக்கு குறித்து மக்களுக்கு அறிவூட்டப்படும்.

அதேநேரம் இவ் வருடத்தை தொற்றா நோய்களைத் தவிர்ப்பதற்கான வருடமாகவும் சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது. தொற்றா நோய்களுக்கும் போஷாக்குக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

அவை ஒன்றிலிருந்து பிரிபட முடியாதவை. அதனால் சரியான போஷாக்கு மிக்க உணவு வகைகளை உட்கொள்வதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். தொற்றா நோய்கள் அண்மைக் காலமாக எமக்குப் பெரும சவாலாக மாறியுள்ளது. இதற்கு எமது மக்களின் உணவு மற்றும் பழக்க வழக்கத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றமே பிரதான காரணம்.

இந்நாட்டில் தினமும் இடம் பெறும் உயிரிழப்புகளில் பெரும் பாலானவைக்கு தொற்றா நோய்களே அடிப்படைக் காரணமாக உள்ளன.

குறிப்பாக அதிக சீனி மற்றும் உப்பு பாவனை பல தொற்றா நோய்களுக்கு மூலகாரணிகளாக விளங்குகின்றன. நீரிழிவு, இருதய நோய்கள், சிறுநீரகப் பாதிப்பு, புற்று நோய்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இந்நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவென சுகாதார அமைச்சு வருடா வருடம் பெருந்தொகை நிதியைச் செலவிட்டு வருகின்றது. ஆனால் தற்போதைய உணவு மற்றும் நடத்தை பழக்க வழக்கங்களின் மாற்றத்தின் மூலம் இந் நோய்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இதேவேளை, இலங்கையர் மத்தியில் நாளாந்த சீனி மற்றும் உப்பு நுகர்வு மிக அதிகமாக உள்ளது. இதனைக் குறைப்பது மிக அவசியமான தேவையாக மாறியுள்ளது. அதனால் இதற்கு வழி செய்யும் வகையிலான சுற்றறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இச்சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் விசேட வளவாளர்களில் ஒருவராகப் பங்குபற்றிய சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவுப் பணிப்பாளர் டொக்டர் தலதா லியனகே இலங்கையர் நாளொன்றுக்கு மூன்று தேக்கரண்டிகள் சீனியையும் ஒரு தேக்கரண்டிக்கும் குறைவான உப்பையும் நுகர்வதற்கே சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.



மறவன்புலோ திருமகள் மாதர் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு ஊதுபத்தி தயாரிப்பது தொடர்பான பயிற்சி வகுப்பு கடந்த 4,5 மற்றும் 6ஆம் திகதிகளில் மறவன்புலோவில் நடைபெற்றது. மாதர் சங்கத்தலைவி இராசமணி தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சிப் பட்டறையில் இந்தியாவிலிருந்து வந்த பயிற்சியாளர்கள் பயிற்சிகளை வழங்கினர்.

மறவன்புலோ திருமகள் மாதர் சிக்கன் கடன் வழங்கு சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் அல்லாதோர் என 75இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றனர். இவ்வாறான பயிற்சிகள் மூலம் ஓய்வு நேரத்தில் வீட்டிலிருந்த படி தமது வாழ்வாதாரத்தினைப் பெருக்கிக் கொள்ள முடியும் என பயிற்சியில் கலந்து கொண்ட ஒருவர் குறிப்பிட்டார்.

# மக்களைப் பாதுகாக்கவே வடபகுதியில் இரா்ணுவத்தினர்

## அமைச்சர் பசில் விளக்கம்

(புதுக்குடியிருப்பு)

மக்களைப் பாதுகாக்கவும் அவர்களின் எதிகால சுபீட்சமான வாழ்விற்காகவுமே இராணுவத்தினர் இங்கு இருக்கின்றார்களே தவிர தமிழ் மக்களின் காணிகளை சுவீகரிப்பதற்காக அல்ல ஏன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச செயலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் நீண்டகாலமாக வன்முறையை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தின் பங்களிப்பு மிகமித முக்கியமானதாகும். தங்கள் குடும்பங்களை விட்டு இங்கு இராணுவத்தினர் இருக்கின்றனர். அவர்கள் குடியேற்றங்களைச் செய்யவோ, குடியிருப்புக்களை அமைக்கவோ, காணிகளை சுவீகரிப்பதற்கோ இங்கிருக்கவில்லை. இங்கு வாழும் மக்களின் பாதுகாப்புக்கும். அவர்களின் சுபீட்சமான வாழ்விற்காகவுமே அவர்கள் இங்கு கடமையாற்றி வருகின்றனர்.

முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களில் சில குறைபாடுகள் இருக்கலாம். இருந்தாலும் குறைபாடுகள் இல்லாத மனிதர்களும் இல்லை. நாடுகளு் இல்லை. இதனைப் பயன்படுத்தி சிலர் சூழ்ச்சிகளைச் செய்ய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு நீங்கள் எம்மோடு கைகோர்த்து வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# 50ரூபா பிக்பொக்கட்டால் 10 வருடங்கள் சிறைவாசம்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் வைத்து பெண்ணொருவரிடம் 50 ரூபாவை பிக்பொக்கட் அடித்த ஒருவர் 10 வருடங்களுக்கு பின்னர் விடுதலைச்செய்யப்பட்டுள்ளார். கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் அவரை விடுதலைச்செய்துள்ளது. அக்குரஸ்ஸையை சேர்ந்த இந்திக்க மதுரங்க என்பவரையே கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இவ்வாறு விடுதலைசெய்துள்ளார்.

இவர் மீதான குறித்த வழக்கு கடந்த 10 வருடங்களாக இழுபட்ட நிலையில் காணப்பட்டதுடன் பிணை நிபந்தனைகளை மீறியமைக்காக கடந்த 3 மாதங்களாக தடுப்புக் காவலிலும் அவர் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நீதிமன்றத்தில் ஆஜராகாததையடுத்து அவருக்கு எதிராக நீதிமன்றத்தினால் பல முறை பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே மேற்படி வழக்கில் விசேட கவனத்தைச் செலுத்திய கொழும்பு நீதவான் அவரை எச்சரித்து விடுதலை செய்தார்.

# கடந்த வருடத்தில் கடும் வறட்சி; சிறிதாக்கியுள்ள தேங்காய்கள்

தேங்காய்கள் சிறிய அளவினதாகக் காணப்படுகின்றமையினால், தேங்காய் சார்ந்த உற்பத்திகளுக்கு இரண்டு மடங்கு தேங்காயினைப் பயன்படுத்த வேண்டியுள்ளதாக லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையம் குறிப்பிட்டுள்ளது. கடந்த வருடம் நிலவிய வறட்சி காரணமாக தேங்காய்களின் அளவு சிறிதாகியுள்ளதாக நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜயந்த குணதிலக்க தெரிவித்தார். இதேவேளை, வறட்சியினால் இந்த வருடம் 300 மில்லியன் தேங்காய்கள் குறைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், இந்த வருடம் 2800 மில்லியன் தேங்காய்கள் கிடைக்குமென எதிர்பார்த்துள்ளதாக தெங்கு ஆராய்ச்சி நிலையம் குறிப்பிட்டது. கடந்த வருடம் புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் நிலவிய வறட்சி காரணமாக, தற்போது கிடைக்கும் 50 வீதமான தேங்காய்களின் அளவு சிறிதாகக் காணப்படுவதாக நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

நவம்பர் மாதம் முதல் நிலைமை வழமைக்குத் திரும்புமென ஜயந்த குணதிலக்க சுட்டிக்காட்டினார். மழையுடனான வானிலை தொடரும் பட்சத்தில் இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்

# கடல் மார்க்கமாக மன்னாருக்கு வருகைதந்த சுவிஸ்நாட்டவர்

(மன்னார்)

இந்தியாவில் இருந்து வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் 4 பேர் "கைட் போட்" ஐ பயன்படுத்தி கடல் மார்க்கமாக முதல் முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் தலைமன்னார் கடற்பரப்பை வந்தடைந்தனர்.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த குறித்த நான்கு பேரும் இந்தியாவிற்குச் சென்ற நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் இந்திய தனுஷ்கோடி கடற்கரையில் இருந்து "கைட் போட்" ஐ பயன்படுத்தி தலைமன்னாரை நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தனர்.



இவர்களுடைய கடல் மார்க்கமான பயணத்திற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதியை வழங்கி இருந்தது.

கடந்த செவ்வாய் மதியம் 12.30 மணியளவில் தலைமன்னார் கடற்கரையை வந்தடைந்த இவர்கள் தலைமன்னாருக்கு வருவதற்கான சகல ஏற்பாடுகளையும் எழிமன்ஸ் அமைப்பின் முகாமையாளர் ஜெரோம் பெனாண்டஸ் மேற்கொண்டிருந்தார்.

இவர்களுடைய வருகையை பதிவு செய்து விசாரனைகளை மேற்கொள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரி எஸ்.யசோதன், சுங்கத்திணைக்கள் அதிகாரிகளான என்.எஸ். குமார நாயக்க, என்.வீரசிங்க ஆகியோர் தலைமன்னார் கடற்கரைக்குச் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளின் உளநல விருத்தி விசேட திட்டம் ஆரம்பம்

கைதிகளின் உளநல விருத்திக்கான விசேட திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதற்கான உளநல விசேட நிபுணர்கள் மூவரை வெலிக்கடை, போகம்பர மற்றும் மஹர சிறைச்சாலைகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் உளநல பிரிவின் பணிப்பாளர் டொக்டர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் உளநலம் பாதிக்கப்பட்ட கைதிகள் இருப்பது தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். எனவே, அவ்வாறனவர்களை தெரிவுசெய்து அவர்களுக்கு விசேட உளநல பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். அவர்களுக்கான ஆலோசனைகளும் இதன்போது வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் உளநலப் பிரிவு குறிப்பிட்டது. இதனூடாக அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும், அவர்களால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகளையும் குறைத்துக்கொள்ள முடியுமென டொக்டர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்தார்.

29) சதுரவடிவக் காணி ஒன்றைச் சுற்றி 40 தூண்கள் நடப்பட்டன. இரண்டு தூண்களுக்கிடையிலான இடைவெளி 2 m எனின் சதுரவடிவக் காணியின் சுற்றளவு யாது?
1) 80 m  2) 72 m  3) 78 m


30)  இப்பறவை உள்ள காசுத்தாளின் பெறுமதி யாது?
1) 50.00  2) 100.00  3) 500.00

**வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.**



31) 3514 → 4625 → 5736 → ☐
1) 7356  2) 6573  3) 6847

32) 352 → 442 → 811 → 631 → ☐
1) 642  2) 451  3) 358

33) 19 ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்தைக் குறிக்கும் ஆண்டைத் தெரிவு செய்க.
1) 1808  2) 1903  3) 1925

34) வரகு என்பதை எனவும் களைப்பு என்பதை எனவும் எழுதலாம் எனின் குவளை என்பதைக் குறிக்கும் குறியீட்டைத் தெரிவு செய்க.

1) 2) 3)


35) வியாதி என்பதை BKD எனவும் கனவு என்பதை MPS எனவும் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதினால் தியானம் என்பதைக் குறிக்கும் குறியீடு எது?
1) DKPB  2) DKPT  3) DPKR

36) 1/4 பங்கு நிழற்றப்பட்ட உருவைத் தெரிவு செய்க.
1)  2)  3) 

37) தேவியின் சேர்விலக்கம் 6 இலக்கங்களைக் கொண்டது. முதலாம் மூன்றாம் இலக்கங்கள் ஒற்றை எண்கள் இரண்டாம் இலக்கம் ஆறாம் இலக்கத்தின் நான்கு மடங்காகும். 4 ஆம், 5 ஆம் இலக்கங்களின் கூட்டுத்தொகை ஒன்பது ஆகும். தேவியின் சேர்விலக்கம் யாது?
1) 725638  2) 583452  3) 135279

**வினாவிற்குரிய விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) 3 | 8) 2 | 15) 1 | 21) 3 | 24) அறையில் ஆடியே அம்பலத்தில் ஆட வேண்டும். | 30) 1 | 35) 2 |
| 2) 1 | 9) 1 | 16) 3 | 22) 2 | 25) 3 | 31) 3 | 36) 1 |
| 3) 3 | 10) 2 | 17) 1 | 23) ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி | 26) 1 | 32) 2 | 37) 2 |
| 4) 2 | 11) 1 | 18) 4 | | 27) 2 | 33) 1 | |
| 5) 3 | 12) 2 | 19) 1 | | 28) 3 | 34) 3 | |
| 6) 2 | 13) 3 | 20) 2 | | 29) 2 | | |
| 7) 1 | 14) 3 | | | | | |



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013 1.30 மணி



# கல்வி முரசு

ஆசிரியர் : சண் சுதர்சன்

முதலாம் இரண்டாம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டு உருக்களுடன் மிக நெருங்கிய தொடர்பினை உடைய சொற்கள் அடங்கிய விடையின் கீழ்க் கோடிடுக.

01) 
1) தகவல் - பணம் - கட்புலம்
2) மின்னஞ்சல் - சேமிப்பு - தொலைதூரம்
3) உரையாடல் - தொடர்பாடல் - மின்சாரம்

02) 
1) மகரந்தச்சேர்க்கை - தேன் - பூச்சி
2) சிறகு - விவசாயம் - சுறுசுறுப்பு
3) ஆறுகால் - முட்டை - மாமிசம்

03) சதுரம் தொடர்பான சரியான கூற்று எது?
1) நான்கு சமபக்கங்களைக் கொண்ட திண்ம வடிவம்
2) மூன்று சமபக்கங்களைக் கொண்ட மூடிய வடிவம்
3) நான்கு சமபக்கங்களைக் கொண்ட தள வடிவம்

04) பின்வருவனவற்றில் பிழையான கூற்று எது?
1) இரசம் திரவ நிலையில் உள்ள உலோகம்.
2) எல்லா மாதங்களிலும் ஐந்து வாரங்கள் உண்டு.
3) பாதையைக் கடக்கும்போது முதலில் வலது பக்கத்தைப் பார்க்க வேண்டும்.

05) இரு பக்கப்பகுதிகளும் சமனாக இருக்கும் விடையைத் தெரிக?
1) 2) 3)


**கண்காட்சி ஒன்று மூன்று கட்டங்களில் காண்பிக்கப்பட்டது.**

முதலாம் கட்டம் - 3 நாட்கள்
இரண்டாம் கட்டம் - முதல்கட்டத்தில் இரண்டு மடங்கு
மூன்றாம் கட்டம் - இரண்டாம் கட்டத்தின் 1/2 பங்காகும்.

6) மூன்றாம் கட்டம் எத்தனை நாட்கள் காண்பிக்கப்பட்டுள்ளது?
1) 6 நாட்கள்
2) 3 நாட்கள்
3) 4 நாட்கள்

07) கண்காட்சி 12 ஆம் திகதி ஆரம்பமானது எனின் மூன்றாம் கட்டம் முடிவடைந்த நாள் எது?
1) 23 ஆம் திகதி  2) 24 ஆம் திகதி  3) 15 ஆம் திகதி

08) நோயாளி ஒருவருக்கு '6 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை இரு மாத்திரைகள் எடுங்கள்' எனக்கூறி வைத்தியர் 32 மாத்திரைகளை வழங்கினார். அம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்கு போதுமானது?
1) 8 நாட்கள் 2) 4 நாட்கள் 3) 6 நாட்கள்


09) கண்ணனிடம் இருந்த பேனாக்களில் இரண்டைத் தவிர ஏனையவை சிவப்பு நிறம். இரண்டைத் தவிர ஏனையவை கறுப்பு நிறம். இரண்டைத் தவிர ஏனையவை நீலநிறம் எனின் கண்ணனிடம் இருந்த பேனாக்கள் எத்தனை?
1) 3 2) 6 3) 9

**குறித்த ஒரு வருடத்தின் நாட்காட்டியில் இருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.**

| | | |
|---|---|---|
| மார்ச் - 1 செவ்வாய் | ஏப்ரல் - 1 வெள்ளி | மே 1 - ஞாயிறு |
| மார்ச் - 31 வியாழன் | ஏப்ரல் - 30 சனி | மே - 31 ................ |



10) இதற்கேற்ப அவ்வருடம் மே 31 ஆம் திகதி என்ன கிழமை?
1) புதன் 2) செவ்வாய் 3) சனி


11) இதற்கேற்ப ஜுன் 30 ஆம் திகதி என்ன கிழமை?
1) வியாழன் 2) புதன் 3) வெள்ளி


12)  இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 7 2) 12 3) 9

**13 ஆம், 14 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

13) நான்கு =  எனின் ஆறு =


1)  2)  3) 

14)  எனின்  =


1)  2)  3) 


**15) கடிகாரம் ஒன்றின் முள் எப்போதும் சுழல்வது?**
**1) வலஞ்சுழியாக 2) இடஞ்சுழியாக 3) மேலிருந்து கீழாக**


**16) அந்த முதியவர் கண் மூடிவிட்டார். கண் மூடுதல் என்பது?**
**1) நித்திரை செய்தல் 2) அறிவு உண்டாகுதல் 3) இறத்தல்**

17)  இவ்வுரு சம அளவான ஈர்க்குத்துண்டுகளால் அமைக்கப்பட்டது எனின் பயன்படுத்தப்பட்ட ஈர்க்குத் துண்டுகள் எத்தனை?
1) 21 2) 11 3) 15



18)  முதலில் தரப்பட்ட உருவை அமைக்கத் தேவையான பகுதியைத் தெரிக

1)  2)  3)  4) 

19) 

1)  2)  3)  4) 

**சில பொருட்களின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

| | | |
|---|---|---|
| 2Kg அரிசி | = | 500g தேயிலை |
| 1Kg தேயிலை | = | 400g பால்மா |
| 1kg அரிசி | = | 500g பருப்பு |

20) இதில் விலை கூடிய பொருள் எது?
1) தேயிலை 2) அரிசி 3) பருப்பு

21) 2 kg அரிசியின் விலை ரூபா 160 எனின் 800g பால்மாவின் விலை யாது?
1) 320.00 2) 240.00 3) 640.00

**தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழி அமைக்குக.**

23) சட்டியானாலும் / கொளுக்கட்டை / சரி / வெந்தாற் / ஒட்டை

---------------------------------------------------------------

24) ஆடியே / அம்பலத்தில் / வேண்டும் / அறையில் / ஆட

---------------------------------------------------------------

**25 ஆம் 26 ஆம் வினாக்களுக்கு காரணமாக அமையக்கூடிய விடையைத் தெரிக.**

25) நேற்று விமானசேவை முழுமையாக தடைப்பட்டது.
1) விமானத்தில் இயந்திரக் கோளாறு
2) நேற்று விடுமுறை தினமாகும்.
3) சீரற்ற காலநிலை நிலவியமை.

26) நாவலர் வித்தியாலய மாணவர்கள் சென்ற ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றனர்.
1) மாணவர்கள் அதிக முயற்சியுடன் கல்வி கற்றமை.
2) பாடசாலை அடைந்துள்ள பிரபல்யம்.
3) பரீட்சை இலகுவாக இருந்தமை.

27) நீர்த்தாங்கி ஒன்றில் 1/8 பங்கு நீர் நிறைய 10 நிமிடங்கள் எடுக்கும் எனின், தாங்கி முழுமையாக நிறைய எடுக்கும் காலம் யாது?
1) 1 மணி 2) 1 மணி 20 நிமிடம் 3) 45 நிமிடம்

28) 2008 ஆம் ஆண்டு 29 ஆவது ஒலிம்பிக்போட்டி நடைபெற்றது எனின் 2016 ஆம் ஆண்டு எத்தனையாவது ஒலிம்பிக்போட்டி நடைபெறும்?
1) 37 ஆவது 2) 21 ஆவது 3) 31 ஆவது

# அமைதிப்படை உணவில் முறைகேடு

## குப்தா உட்பட இருவருக்கு சிறை

இலங்கையில் இந்திய அமைதிப்படையினர் நிலை கொண்டிருந்த போது, அவர்களுக்கு ஆட்டிறைச்சி விநியோகத்ததில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாக இந்திய இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவருக்கு சி.பி.ஐ நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இலங்கையில் "ஒப்பரேசன் பவான்" நடவடிக்கையை இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்டிருந்த போது, தென் பிராந்திய இராணுவத் தலைமையகத்தினால், இந்தியப் படையினருக்கான விநியோகங்களை மேற்கொள்வதற்கு சென்னையில் விநியோக மையம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்த விநியோக மையத்தினால், தகரத்தில் அடைக்கப்பட்ட ஆட்டிறைச்சியை விநியோகிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டில் முறைகேடு நடந்துள்ளதாக 1990இல் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தியச் செய்திகள்

இதனடிப்படையில், மேஜர் ஜெனரல் ஏ.கே.குப்தா மற்றும் லெப்.கேணல் எஸ்.எஸ்.காடியன் ஆகியோர், கோஸ்தா அன் கொம்பனி என்ற நிறுவனத்துக்கு சார்பாக, தமது பதவியைப் பயன்படுத்தியதாக சி.பி.ஐ.நிதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

22 ஆண்டுகள் நீடித்த இந்த வழக்கிலேயே மேஜர் ஜெனரல் ஏ.கே.குப்தாவுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையும், லெப்.கேணல் எஸ்.எஸ். காடியனுக்கு ஒரு ஆண்டு சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. இருவருக்கும் தலா 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# தனிப்பட்ட பயணமாக இலங்கை வரும் பா.ஜ.க.குழு

(டில்லி)

இலங்கையில் தமிழர்கள் நிலை குறித்து அறிந்து வருவதற்காக குழுவொன்று அங்கு செல்லவுள்ளது. இந்த முறை ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான பா.ஜ.க. குழுவினர் இலங்கை செல்கிறார்கள். இந்தக் குழுவில் மொத்தம் 3 பேர் இடம் பெறுகிறார்கள். இவர்கள் ஜூன் 4ஆம் திகதி டில்லியிலிருந்து கொழும்பு போகிறார்கள்.

அங்கு ஜனாதிபதி ரராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ உள்ளிட்டோரைச் சந்தித்துப் பேசி விட்டுவரப் போகிறார்கள்.

மேலும் வடக்கிற்கும், செல்கின்றனராம். அங்கு இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளையும் இவர்கள் பார்வையிடுவார்கள்.

இவர்களின் விஜயம் குறித்து இந்தியத் தூதரகத்திற்கும் இதுவரை தகவல் இல்லையாம். எனவே பா.ஜ.க. வினரின் வருகை தனிப்பட்ட பயணமாக இருக்கும் என்று தெரிகிறது.

# திட்டங்களை முடிப்பதில் காலதாமதம் பாதுகாப்பு அமைச்சர் அதிருப்தி



பல்வேறு இராணுவத் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலவிரயம் தொடர்பாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துக்கு (டி.ஆர்.டி.ஓ) பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் புது டில்லியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் விருது வழங்கும் விழாவில் கூறியதாவது,

இலகு ரக தேஜஸ் விமானத் தயாரிப்பு உட்பட பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத் திட்டங்களில் ஏற்பட்டு வரும் கால விரயம் குறித்து அதிருப்தி ஏற்படுகிறது. காலவிரயம் ஏற்படுவதற்கும் ஒரு அளவு உண்டு. மத்திய இராணுவ ஆராய்ச்சி மையத்தினர் உடனே செயற்பட வேண்டும் அல்லது விலகி விட வேண்டும்.

முப்பது ஆண்டுகளானாலும் தேஜஸ் போர் விமானத் தயாரிப்பு பணி முடிவடையவில்லை. அந்தப் போர் விமானம் செயற்படுவதை நேரில் பார்க்க நான் காத்திருக்கிறேன். உலகம் முழுவதும் இராணுவ ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவது மிகவும் சிரமமான பணியாகும். இலகு ரக விமான தயாரிப்பு எளிதான காரியம் இல்லை தான். இலக்கை அடைய நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை எத்தனை முறை நீட்டிப்பது? இனி மேலும் பொறுப்பதற்கில்லை. செய் அல்லது செத்து மடி என்று தான் கூற வேண்டியுள்ளது, என, கோபமாக தெரிவித்தார்.

இலகு ரக தேஜஸ் போர் விமானத்தை பொறுத்தவரையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன ஒரு திகதியை நிர்ணயித்துள்ளது. அது இறுதி திகதியாக இருக்க வேண்டும். தேஜஸ் விமானம் பறப்பதற்கான இரண்டாம் கட்ட அங்கீகாரத்தைப் பெற வேண்டும். எச்.ஏ.எல், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், இந்திய விமானப்படை உள்ளிட்டவை இணைந்து செயற்பட வேண்டும். தேஜஸ் விமானத்துக்கான இறுதிக் கட்ட அங்கீகாரத்தை அடுத்த ஆண்டு இறுதியில் பெற வேண்டும் என்றார் அந்தோனி





**வங்காளமொழி படத் தயாரிப்பாளர் ரிது பர்னோ கோஷ் தனது 49வது வயதில் மாரடைப்பால் மரணமடைந்தார். இவருக்கு சமீபத்தில் நடந்த 60ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடமிருந்து விருதினை பெற்றார். இவர் 19தேசிய விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

# அணு மின்சார உற்பத்திக்கு உதவ முன்வந்தது ஜப்பான்

உலகிலேயே அணு ஆயுதத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட நாடு ஜப்பான், இதனால் அணு ரீதியாலான எந்த ஒப்பந்தத்தையும் எந்த நாட்டுடனும் ஏற்காமல் இருந்தது. இந்த நிலையில் அணுமின்சார உற்பத்தியில் இந்தியாவுக்கு உதவ ஜப்பான் முன் வந்துள்ளது.

அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாவிட்டாலும், ஆக்கபூர்வமாக அணுசக்தியை பயன்படுத்துவதால், ஜப்பான் இம் முடிவுக்கு வந்துள்ளது. மேலும், மும்பையில் 3ஆவது மெட்ரோ இரயில்பாதை அமைப்பது உட்பட இந்தியாவில் நிறைவேற்றப்பட உள்ள 9 திட்டங்களுக்கு ரூ.23.32 இலட்சம் கோடி கடன் வழங்கவும் ஜப்பான் ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் மூன்று நாள் பயணமாக ஜப்பான் சென்றார்.



தலைநகர் டோக்கியோவில் அந்நாட்டு பிரதமர் ஷின்ஜோ அபேயுடன், பிரதமர் மன்மோகன் சிங் பேச்சு வார்த்தை நடத்தினார். அணு குண்டு வீச்சால் பாதிக்கப்பட்ட ஒரே நாடு ஜப்பான் என்பதால், அணுசக்தி தொடர்பாக எந்த நாட்டுக்கும் உதவுவதில்லை என்று அந்நாடு முடிவெடுத்திருந்தது.

அணு ஆயுத பரவல தடுப்பு ஒப்பந்தம்(என்பிடி), அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம்(சி.டி.பி.டி) ஆகியவற்றில் இந்தியா கையெழுத்திடவில்லை என்றாலும், அணுசக்தியை ஆக்கப்பூர்வமாக மட்டுமே பயன்படுத்துவதால், இந்தியாவின் அணு மின் உற்பத்திக்கு உதவ ஜப்பான் தற்போது முன் வந்துள்ளது.

டோக்கியோவில் இருநாட்டு பிரதமர்களும் பேச்சு வார்த்தை நடத்திய பின்பு கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, இந்தியா, ஜப்பானுக்கு அணு மின்சக்தி மிக முக்கியமானது. அதேசமயம் இதில் பாதுகாப்பு என்பதும் இரு நாடுகளுக்கும் மிக முக்கியமானதாக உள்ளது. இதனால், அணுமின்சக்தி உற்பத்தியில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட விரைவில் ஒப்பந்தம் போடப்படும்.

## வாழ்க வளமுடன்

பெயர் : தி.சலோமியா

முகவரி : 10ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

அகவை 5 இல்



பெயர் : பி.ஆகாஷ்

முகவரி : சந்தவளவு, சுன்னாகம்.

அகவை 7 இல்



பெயர் : ஜெ.லக்சாங்

முகவரி : இல.218/42 சகாயமாதாபுரம், வவுனியா.

அகவை 8 இல்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்


உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## மக்கள் ஒத்துழைப்பார்களா?

(வரணி)

வடவரணிப்பிரதேசத்தில் உள்ள உள் வீதிகளில் ஓங்கிவளர்ந்து நிற்கும் பனை, தென்னை மரங்களால் மின் விநியோகத்திற்கு பாதிப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதிகளால் மின் இணைப்புக்கள் தொடர்ந்து செல்வதால் தற்போது வீசும் கடும் காற்று காரணமாக எந்நேரமும் இம்மரங்கள் முறிந்து விழ வாய்ப்புள்ளதால் இம் மரங்களை அனுமதியுடன் அகற்றி மின்விநியோகத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் காணி உரிமையாளர்கள் முன்வந்து மின்சாரசபையினருக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என இப்பகுதிமக்கள் கேட்டுக்கொள்கின்றனர், (150)



பண்டத்தரிப்பு காலையடி அருள்மிரு ஞானவேலாயுதர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 7ஆம் திகதி இரதோற்சவமும், 8ஆம் திகதி சனிக்கிழமை சம்பில்துறை தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## சமச்சீரற்ற பயன்பாட்டினால் குடாநாட்டில் குடிநீருக்கு நெருக்கடி

யாழ்.குடாநாட்டில் நிலத்தடி நீரின் பயன்பாடு மிகையாக உள்ளதாக ஆய்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் நிலத்தடி நீரின் பயன்பாடானது சமநிலையற்றுக் காணப்படுவதால் எதிர்காலத்தில் இங்கு நீரைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலை ஏற்படுவதற்கான ஆபத்து உள்ளது என யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த, இந்த ஆய்வை மேற்கொண்ட இரண்டு துறைசார் ஆய்வாளர்களில் ஒருவரான சாந்தி டீ சில்வா தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 18 அன்று இடம்பெற்ற இந்த ஆய்வு தொடர்பான விளக்கக்காட்சி ஒன்றின் போதே யாழ்ப்பாணத்தில் தற்போது நிலத்தடி நீர் மிகையாகப் பயன்படுத்துவது தொடர்பாக விளக்கப்பட்டது. "நீருக்கான கேள்வி தற்போது அதிகரித்துள்ள நிலையிலும் நீர்நிலைகளின் நீர்மட்டம் போதியளவில் அதிகரிக்கவில்லை. மழைவீழ்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுவதால் நீர்நிலைகளில் நீர் காணப்படவில்லை" என 2012 டிசம்பரில் வெளியிடப்பட்ட "வெப்பமண்டல விவசாய ஆராய்ச்சி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் இடம்பெற்ற பகுதிகளுக்கு ஆயிரக் கணக்கான மக்கள் மீண்டும் குடியேறிவருவதால், நிலத்தடி நீருக்கான தேவை மேலும் அதிகரித்துள்ளதாக, 2012இல் பெண்கள் நீரியற்துறைசார் வல்லுனர்களின் வலைப்பின்னலின் தலைவியும், 2012இல் பெண்கள் சார்பாக நீரியற்துறைக்கான விருதைப் பெற்றவருமான குசும் அத்துக்கொறல தெரிவித்துள்ளார்.

"இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படுவதால் முன்னைய போர் வலயத்தில் நிலத்தடி நீருக்கான கேள்வி அதிகரித்துள்ளது. ஆனால் இந்த நீரைப் பயன்படுத்துவதில் சமநிலை பேணப்படவில்லை. இந்நிலையில் முன்னெச்சரிக்கை நகர்வுகளை மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் நீருக்கான நெருக்கடிநிலையைக் குறைக்க முடியும்" என குசும் அத்துக்கொறல மேலும் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் பெறப்படும் நீரின் 50 சதவீதத்தை சேமித்து வைப்பதன் மூலம் நீர்ப்பயன்பாட்டில் சமநிலையைப் பேணமுடியும் என நீரியற்துறை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீரானது விவசாயம், வீட்டுத் தேவை மற்றும் நீர்வழங்கல் போன்றவற்றுக்காக பிரதானமாகப் பயன்படுத்தப்படுவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொது இடங்களில் மழைநீரைத் தேக்கி வைக்கக் கூடிய வகையில் நீர்த்தேக்கங்களை அமைப்பதுடன், விவசாயிகள் நீரை அளவுக்கதிகமாக பயன்படுவதை தடுப்பதன் மூலமும் யாழ்ப்பாணக் . குடாநாட்டில் எதிர்காலத்தில் நிலத்தடி நீருக்கு ஏற்படும் நெருக்கடியைத் தடுக்க முடியும் எனவும் நீரியற்துறை ஆராய்ச்சியாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ஆரோக்கியமான சமூகம் உருவாக புகைத்தலை கைவிடுவோம்

**இன்று சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமாகும் இத்தினத்தை முன்னிட்டு இவ் ஆக்கம் பிரசுரமாகிறது**



இன்று சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமாகும். புகைத்தல் எனும் தீய பழக்கத்தைத் தவிர்த்து ஆரோக்கியமான சமூகங்களாக வாழ வேண்டும் என்பதற்காகவே புகைத்தல் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

மக்களின் ஆரோக்கிய வாழ்க்கையைக் கெடுப்பதில் இன்று புகைப் பொருட்கள் முக்கிய பங்கினை வகித்துவருகின்றன. காலா காலமாக புகைப் பொருட்களின் தீமைகள் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தப்பட்ட போதும், புகைத்தலில் ஈடுபடுவோர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், புகைப் பொருட்களின் உற்பத்திகளும் அதிகரித்தவண்ணமுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அண்மைக் காலங்களில் தொற்று நோய்களின்தாக்கங்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளபோதும், தொற்றா நோய்களின் தாக்கங்கள் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

தொற்றாநோய்கள் அதிகரிப்பதற்கான காரணங்களில் புகைப் பொருட்கள் முன்னணியில் உள்ளன. உலகளாவிய ரீதியில் சம்பவிக்கும் மரணங்களில் தடுக்கக் கூடிய காரணியாகவுள்ளது புகைபிடித்தல் பழக்கமாகும். உலகில் 10 வினாடிக்கு ஒருவர் புகைத்தலால் இறக்கிறார். உலக சுகாதார அறிக்கையின் படி பத்துபேரில் ஒருவர் இறப்பதற்கு புகைத்தல் காரணமாகவுள்ளது. தற்போது உலகளாவிய ரீதியில் 100 மில்லியன்பேர் புகை பிடிப்பதாகவும், வயது வந்தவர்களில் மூன்றில் ஒருவர் புகைத்தலுக்கு அடிமையாகியுள்ளதும் தெரியவருகிறது.

புகைப் பொருட்களில் உள்ள இரசாயன பதார்த்தங்கள் உடலில் மாறுதல்களை ஏற்ப்டுத்துவதுடன், சில பதார்த்தங்கள் மன நிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றன. இதனால் புகைப் பிடிப்பவர்கள் அப்பழக்கத்திற்கு இலகுவில் அடிமையாகி விடுவதுடன் அப்பழக்கத்தில் இருந்து விடுபட முடியாதுள்ளனர். இதனை விஞ்ஞான அறிவு பூர்வமாக அறிந்து கொள்வதன் மூலம் அப்பழக்கத்திற்கு அடிமையாகாது விலகி இருப்பதுடன் பழக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீள முடியும்.

புகைப்பொருட்களில் பெரும்பாலான நச்சுப்பொருட்கள் காணப்படுகின்றன. அவற்றில் நிக்கோட்டின், தார், காபன் மொனொக்சைட், பென்சின், மெதனோல், டி.டி.ரி. அமோனியம், ஆசனிக், சயனைட் போன்றன காணப்படுகின்றன.

நிக்கோட்டின் பதார்த்தம் புகைத்தலினூடாக குருதியில் கலந்து மூளைக்கு சென்றடையும். மூளையில் சந்தோசமான மன உணர்வை தோற்றுவிப்பதாக செயற்படும். இதனால் புகைப்பவர் மீண்டும் மீண்டும் புகைக்க முயற்சிப்பார். இதனால் நரம்புகள் பாதிப்படைந்துவிடும். அவர் தனது சுய கட்டுப்பாட்டை இழந்துவிடுவார். இதனால் இப்பழக்கத்திற்கு அடிமைய்ாகி புகைப் பழக்கத்தை தொடர்ந்த வண்ணம் இருப்பார்.

இவ்வாறாக மனக்கட்டுப்பாட்டை இழந்தவர்களுக்கு நேர்மறை சிந்தனைகளை




அதிகரிப்பதன் ஊடாக மனத் தெளிவை ஏற்படுத்தி மனக்கட்டுப்பாட்டைசெயற்படவைக்க மனோதத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளலாம். இவ்வாறான சிகிச்சைகளுக்கு வசப்படுபவர்கள் மிக சொற்பமானவர்களாகவே இருப்பார்கள். உடல் ரீதியான பாதிப்புகளை நோக்கின் தொற்றாத நோய்களைப் பார்க்கின் மாரடைப்பு, உயர் இரத்த அழுத்தம்,புற்று நோய், நீரிழிவு பக்கவாதம், சிறுநீரக பாதிப்புக்கள் போன்றவற்றைக் காணலாம். அஸ்மா நோயுள்ளவர்கள் புகைத்தலில் ஈடுபடின் நோயின் தீவிரம் அதிகமாகும்.

புகைப் பொருளில் காணப்படும் தார் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அழித்துவிடுவதால் பெரும்பாலான உடல் நோய்கள் ஏற்பட வாய்ப்பாகிவிடுகிறது.

புகைப் பொருட்களை பாவனைக்குட்படுத்தும் பகுதிகளில் இருந்தே நோய்கள் உருவாவதைக் காணலாம். புகைப்பவரின் உதடுகள் கறுப்படைதல், முரசு வீங்குதல், பற்களில் காவிபடிதல், பற்கள் உறுதித் தன்மை இழந்துவிடல் கைவிரல் நகங்களில் கறை பிடிக்கும், முகத்தில் சுருக்கங்கள் ஏற்படும். இளமையில் முதுமை தென்படும், கண்பார்வை குன்றும், மூக்குக் கண்ணாடிஅணியும் நிலை தென்படும்.

மாரடைப்பினால் அதிக மரணங்கள் சம்பவிப்பதற்கு புகைத்தலே காரணமாக அமைந்து விடுகின்றது. புகைப்பொருட்களின் நச்சுத் தன்மை இரத்தக் குழாய்களைக் குறுக்குவதனால் இதயத்தை அதிக வேலை செய்யவைக்கிறது. இதனால் இரத்த அழுத்தம் (Blood Pressure) அதிகரிக்கிறது. இப்புகையிலுள்ள காபன் மொனொக்சைட்டு இரத்தத்தில் உள்ள ஒட்சிசனை வெளியேற்றி விடுகின்றது. இதனால் தேவையான ஒட்சிசன் பெற இதயம் அதிக வேலை செய்ய வேண்டியுள்ளது. இதனால் இதயத் துடிப்பு அதிகரிக்கின்றது.

மாரடைப்பை ஏற்படுத்தும் கெட்ட கொழுப்பினை (கொலஸ்ரோல்) (LDL) அதிகப்படுத்துவதும், மாரடைப்பைத் தடுக்கும் நல்ல கொழுப்பினை (கொலஸ்ரோல்) (HDL) குறைத்து மாரடைப்பை உண்டாக்கி மரணத்தை ஏற்படுத்திவிடும்.

சாதாரணமானவர்களைவிட புகைப்பவர்களுக்கு 10 மடங்கு மாரடைப்பு வரும் வாய்ப்பு உள்ளதாக அறியப்பட்டுள்ளது. ஆண்களில் பாலியல் உறுப்புகளுக்கு செல்லும் இரத்தத்தின் அளவு போதாமையினால் பாலியல் பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியவர்களாக உள்ளனர்.

புகைப்பவர்களைவிட அவர்கள் புகைக்கும் புகையினை சுவாசிக்கும் மனைவி, பிள்ளைகள் போன்றோர் நோய்வாய்ப்படும் நிலை அதிகமாகவுள்ளது. கர்ப்பிணிப் பெண்கள் குறைபாடான சிசுக்களை பிரசவிக்க் வாய்ப்




புள்ளது. பெற்றோர்கள் புகைக்கு அடிமையானவர்களாயின் அவர்களின் பிள்ளைகள் கல்வியில் மந்த மான நிலையையும், அவர்கள் அடிக்கடி நோய் வாய்ப்படும் தன்மையுள்ளவர் களாகவும் காணப்படுவர்.

புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை பலர் மேற்கொண்டபோதும்

**Dr.அ.பிறிற்ரோ டக்ளஸ்,**
தலைவர்
யாழ்.அயுர்வேத பாதுகாப்பு சபை

அவர்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைப்பதில்லை என்பது யதார்த்தம்.

எனவே புகைப்பிரியர்கள் தமது அன்புக்குரியவர்களின் நலனில் அக்கறை கொண்டு தன்னையும், மற்றவர்களையும் அன்பு செய்பவர்களாக,வீட்டிலோ, வேலைத் தளங்களிலோ, பொது இடங்களிலோ புகைத்தலைத் தவிர்த்து நிகழ்கால சந்ததியினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் ஆரோக்கியமானவர்களாக மாற இன்றைய தினத்திலே புகைத்தலை தவிருங்கள்..

# பணம் கறக்கும் அரச பாடசாலை அர்த்தமிழக்கும் "இலவசக் கல்வி"

## பெற்றோரின் குமுறல் காதில் கேட்குமா?

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இயங்கும் பிரபல ஆரம்பப் பாடசாலை ஒன்றில் வகுப்பறைகளில் தொலைக்காட்சி, கணனி என்பவற்றைப் பொருத்துவதற்காக அதிபர் ஒரு தொகைப் பணத்தை தரவேண்டுமென வலியுறுத்தியுள்ளதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கல்வி மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் என பெற்றோர்களுக்கு கடிதம்மூலம் அழைப்பிதழ் அனுப்பி நேற்று முன்தினம் அவர்களுடனான கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவித்த அதிபர் மாணவர்களின் ஒவ்வொரு வகுப்பறையிலும் தொலைக்காட்சி, கணனி என்பவற்றைப் பொருத்துவதற்கும் மற்றும் இதர தேவைகளுக்காகவும் பெற்றோர் ஒவ்வொருவரும் தலா 15 ஆயிரம் ரூபாவினை வழங்க வேண்டுமென வற்புறுத்தித் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தரம் 1 அனுமதியின்போது பிரபல பாடசாலை என்ற போர்வையில் பெருந்தொகைப் பணத்தை அறவிடும் நிலையில் தற்போது மீளவும் தம்மிடம் பணத்தை அறவிட எடுக்கும் முயற்சி குறித்து பெற்றோர்கள் கடும் விசனமடைந்துள்ளனர்.

மாணவர் அனுமதியின் போது எவ்வித பணமும் அறவிடக் கூடாதென கல்வி அமைச்சு சுற்றறிக்கைகள் மூலம் வருடா வருடம் தெரிவித்து வரும் நிலையிலும் இவற்றினை அறவிடும் பாடசாலைகள், அதற்கு மேலாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு என்ற போர்வையில் மீளவும் பணத்தை அறவிட முயற்சிப்பது எவ்வகையில் நியாயம் எனவும் பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (33)

# இளவாலை கொலை வழக்கு; நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டு

(திருநெல்வேலி)

கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் யாழ். மேல் நீதிமன்றம் எதிரியை நேற்று விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

இளவாலைப் பகுதியில் 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி சுப்பையா தர்மலிங்கம் என்பவரைக் கொலை செய்ததாக விநாயகமூர்த்தி விஜயகுமார் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் இவர் மீதான வழக்கு நடைபெற்று வந்த நிலையில் சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு இவ்வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் முன்னிலையில் நடைபெற்று நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதி தனது தீர்ப்பில்,

கொலை செய்யப்பட்டதற்கான நேரடி சாட்சியங்கள் இல்லாததினாலும், சூழ்நிலை சாட்சியங்களை வைத்து ஒருவரை குற்றவாளியாகக் காணமுடியாது என்பதாலும், நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை எனவும் தெரிவித்து எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரியின் சார்பில் சட்டத்தரணி எஸ்.சிவநேசன் ஆஜரானார். அரசு தரப்பில் அரச சட்டவாதி எஸ்.நளினி கந்தசாமி ஆஜரானார். (137)

# இந்திய உதவியுடன் வீடுகள் தெல்லிப்பழையில் மக்கள் பாவனைக்கு

இந்திய வீட்டுத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளின் போது தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 2 வீடுகளின் திறப்பு விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மாவிட்டபுரம், நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்ட இந்த இரு வீடுகளும் நேற்று மு.ப. 10.00 மணிக்கு பால் காய்ச்சி குடிபூரல் நிகழ்வு நடைபெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இந்த வீடுகள் இரண்டும் பூர்த்தி செய்வதற்குரிய 6 மாதங்களுக்கு முன்பதாக 3 மாதங்களில் பூர்த்தியாக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

நேற்றைய நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த சிறிகாந், இந்திய வீட்டுத் திட்டப் பணிப்பாளர் நிமால் சில்வா, உதவித் திட்டப் பணிப்பாளர் கர்சா, பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் கு.பாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். (பா)

# தமிழக அகதிகளை அழைத்து வாருங்கள்

## அரசிடம் மாவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் போரினால் இடம்பெயர்ந்த அனைவரும் மீள் குடியேற்றப்பட்டு விட்டனர் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்த கூற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா முற்றாக நிராகரித்தார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி. வடக்குப் பகுதியில் என்னைப்போன்று இன்னமும் ஒரு இலட்சம் மக்கள் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படாமல் உள்ளனர். அத்துடன் யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற சுமார் 80 ஆயிரம் பேர் 20 ஆண்டுகளாக இன்னமும் முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்திருக்கும் கூற்றை தாமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்தியாவில் முகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழ் மக்களின் நிலையினைக் கணிப்பிடாமல் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி மற்றும் தமிழ்த் தலைவர்கள் இந்த மக்களுக்கு இந்திய குடியுரிமை வழங்கப்படவேண்டும் என்று கோரியிருப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்த மாவை சேனாதிராசா, இந்தியாவிலுள்ள ஈழத்தமிழர்கள் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு மீள்குடியேற்றப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.




மேலும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், இவ்வாறு இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டு மீள்குடியமர்த்தப்படும் மக்களது காணிகள் படையினர் வசம் இருக்குமாயின் அவர்கள் அதனைவிடுவித்து அதில் இந்த மக்கள் மீள்குடியேற அரசினால் ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்றும் தெரிவித்தார். (பா)

## ஜயலத்...

வரையில் புனருத்தாபன மற்றும் மீள்குடியேற்ற அமைச்சராக பதவி வகித்தார். பின்னர் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் நீர்கொழும்பு அமைப்பாளராக செயற்பட்டதுடன், 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் 58 ஆயிரத்து 302 விருப்பு வாக்குகளைப் பெற்று கம்பஹா மாவட்டத்தின் வாக்காளர் பட்டியலில் 4 ஆவது இடத்தை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜயலத் ஜெயவர்த்தன கட்சியின் மிக முக்கியமான பல பதவிகளையும், அமைச்சுப் பொறுப்புக்களையும் வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூர் மருத்துவமனையில் சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்ட போது ஜயலத் ஜெயவர்தன காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## டில்லி மாநாட்டில்...

ஆனால் இம்முறை இந்த மாநாட்டுக்காக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு அந்த அமைப்புக்கள் சிலவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் இப்போது மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் பத்திரிகையாளர்களை மாவை சந்தித்தபோது அங்கு எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர் கூட்டமைப்பு தலைமைகள் அடுத்த வாரம் ஒன்றுகூடி ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டிருக்கும் உத்தேச அரசியல் யாப்புக் குறித்து ஆராய்ந்து அந்த உத்தேச அரசியல் யாப்பு தொடர்பான தமது நிலைப்பாட்டை அறிவிக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த உத்தேச அரசியல் யாப்பு தொடர்பாக தம்முடன் ஐ.தே.க தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியினால் குறிப்பிடப்படும் உத்தேச யாப்பில் பிரதானமாக சுட்டிக்காட்டப்படும் ஒற்றை நாட்டினுள் தீர்வெனும் சொற்பிரயோகங்களில் எமக்கு மயக்கமுண்டு. குறிப்பாக இத்தனை வருட ஆயுதப்போராட்டம் மற்றும் அகிம்சை போராட்டத்தின் பின்னும் ஒற்றை நாட்டினுள் தீர்வெனும் விடயம் துல்லியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்தார்.

இதேவேளை டில்லியில் அடுத்து வரும் மாதங்களில் அழைக்கப்பட்டுள்ள மாநாட்டினை யார் நடத்த அழைக்கிறார்கள் என்பதை பொறுத்தே தமது பங்குபற்றுவதற்கான முடிவு எடுக்கப்படுமென மற்றொரு கேள்விக்கு பதிலளிக்கையில் மாவை தெரிவித்தார். மத்திய அரசா அல்லது காங்கிரஸா இல்லை தனிநபர்களா என்பதைப் பொறுத்தே தமது நிலைப்பாடு அமையும். ஏற்கனவே மத்திய அரசிற்கு கூட்டமைப்பு சார்பில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் மற்றும் நிலைப்பாடு கூறப்பட்டுவிட்டது. இந்நிலையில் மத்திய அரசு மீண்டும் எம்மிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி கேட்கவேண்டிய தேவையில்லை.கடந்த டில்லி மாநாட்டினை சுதர்சன நாச்சியப்பனே ஏற்பாடு செய்திருந்தார். அவர் மத்திய அரசில் ஆளுமை மிக்கவரென கூறப்பட்டது என்றும் மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார்.

## தாய்லாந்து...

மணிக்கு நாடாளுமன்றத்தில் உரைநிகழ்த்தவுள்ளார். ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பி.கள் அனைவரும் இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு விஜயம் செய்யும் தாய்லாந்து பிரதமர், ஸ்ரீதலதா மாளிகையின் மல்வத்தை பீட மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசி பெறவுள்ளார்.

## அமெரிக்க....

என்று சுட்டிக்காட்டியதுடன், தான் வகிக்கின்ற அமைச்சு குறித்த விபரம் கூட பிழையாக சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது சமூக சேவைகள் மற்றும் சமூக நல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் துணை ஆயுதக் குழுவால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் என்று அறிக்கையிடப்பட்டு இருக்கின்ற தகவலை அமைச்சர் முற்றாக நிராகரித்துள்ளார்.

## ஆசிரியருக்கு...

ஈடுபட்டுள்ளனர். குறித்த ஆசிரியர் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபட்டுவருவதாகவும் இத்தகைய ஆசிரியரை இடமாற்றம் செய்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனத் தெரிவித்து மாணவர்களும் பெற்றோர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் ஆசிரியர்களையும் அதிபரையும் பதிவேட்டில் கையொப்பமிடாது முற்றுகையிட்டனர். இதனால் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறாது ஸ்தம்பிதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முற்றுகைப் போராட்டத்தையடுத்து முல்லைத்தீவு பொலிஸார் பாடசாலைக்கு விரைந்து மாணவர்களையும் பெற்றோரையும் அழைத்து கலந்துரையாடல் மேற்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வதாக உறுதிவழங்கினர்.

இதனையடுத்து இச்சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதுடன் முற்றுகையும் பொலிஸாரின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது. (04)

## காணி சுவீகரிப்பு...

இந்தக் காணியை அரசாங்கம் சுவீகரிக்க முயல்வதாகத் தெரிவித்து இரண்டாயிரத்து 176 பேர் இந்த இரண்டு மனுக்களையும் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த இரண்டு மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் எஸ்.ஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த மனுக்களில் யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், காணிமற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன்,யாழ் மாவட்ட நில அளவையாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுத் தேவைக்கு எனத் தெரிவித்து கைப்பற்றப்படவுள்ள இந்தக் காணிகளில் பூர்வீகமாக தாம் வசித்து வந்ததாகவும் இவற்றை அரசாங்கம் சுவீகரிக்கும் பட்சத்தில் தாம் நிர்க்கதிக்குள்ளாவதாகவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். வலிகாமம் வடக்கு மற்றும் தெற்கு உள்ளிட்ட பகுதிகளிலுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்படுவதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதிவாதிகளின் இந்த செயற்பாட்டினை தடுத்து நிறுத்துவதற்கான மனுக்கள் மீதான விசாரணை நிறைவுபெறும் வரை இடைக்கால தடையுத்தரவொன்றை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மேன்முறையீடு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

# வடக்கிற்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவதில் தப்பு இல்லை

## - சுருதியை மாற்றுகிறார் ராஜித



வடமாகாணத்திற்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதில் எவ்வித பிரச்சினைகளும் இல்லை என கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கிற்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க வேண்டாம் என கூறுகின்றனர். மாகாண சபையால் பொலிஸார் நியமிக்கப்படுகின்ற போதிலும் பிரதி பொலிஸ் மா அதிபரை ஜனாதிபதி நியமிப்பதுடன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களை அரசாங்கமே நியமிக்கின்றது.

பொலிஸார் தவறாக செயற்படும் பட்சத்தில் அதனைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுள்ளது.

அது மாத்திரமின்றி மாகாண சபையை கலைக்கவும் ஜனாதிபதிக்கு முழு அதிகாரமுள்ளது.

இதற்கு எதிராக கதைப்பவர்கள் மக்களை திசை திருப்பி இந்த நாட்டை அழிப்பதற்கு முற்படுகின்றனர், என்றார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

# போர்க்கொடி தூக்குகிறது ஜே.வி...

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுக்கு எதிராக ஜே... கட்சி போராட்டமொன்றை நடாத்தவுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 3ஆம் திகதி கையொப்பங்களை... நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கில் தேர்தல்களை நடாத்துவதன் மூலம் நாட்... வினைவாதமே ஏற்படும் என ஜே.என்.பி கட்சியின் உ... பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

களனியில் இந்த கையொப்பங்களைத் திரட்டும் போ... நடத்தப்படவுள்ளது.நாடு தழுவிய ரீதியில் கையெப்பங்க... டப்பட்டு, ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட உள்ள... தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் வெ... வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென கட்சியின் தலைவர்... வீரவன்ச கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். மைந்தனுக்கு அமெரிக்கவிரு...

(கொழும்பு)

இலங்கையைச்சேர்ந்த பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் அமெரிக்காவில் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான "Champion of Change" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை வெள்ளைமாளிகையில் இந்த விருது வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

அமெரிக்காவில் வாழும் வேற்று நாட்டவர்களில் முன்னோடியான கண்டுபிடிப்புக்களுக்காக வழங்கப்படும் இந்த விருதைப் பெற்றவர்களுள் பேராசிரியர் எஸ்.சிவானந்தன் ஒருவரே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவருடன் சேர்த்து 11 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

சிக்காகோ இலினோய்ஸ் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறைப் பேராசிரியராகக் கடமையாற்றும் இவர், இயற்பியலில் பல கண்டுபிடிப்புக்களை வெளியிட்டுள்ளதுடன், பல ஆய்வுகளிலும் இடுபட்டுள்ளார்.

தனது முயற்சியினால் "சிவானந்தன் ஆய்வு மையம்" என்ற இயற்பியல் ... கூடத்தை நிறுவி அ... பல ஆய்வுகளுக்கு... உதவி வருவதுடன், ... நேக்கற்ற பல ஆய்வு... களையும் மேற்கொண்... கிறார்.



இவரது அனுசரணை... யாழ்ப்பாண பல்கலைக்... பௌதீகவியற்றுறையின... சூரியக் கதிர் தொழில்நுட்ப... கூட்டு ஆய்வு நடவடிக்கை... ஈடுபட்டுள்ளனர்.

யாழ். சாவகச்சேரி... பிறப்பிடமாகக் கொண்ட... சிரியர் சிவானந்தன் யாழ்... துக் கல்லூரியின் பழை... மாணவர் ஆவார்.

# மட்டக்களப்பில் மினி சூறாவளி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளை ஊடறுத்து நேற்று மாலை வீசிய பலத்த காற்றினால் 35 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேசத்தில் 10 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 4 பொது கட்டடங்களும் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பட்டிப்பளை பிரதேசத்திலுள்ள 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று மாலை வீசிய காற்றினால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விபரங்களை தொடர்ந்தும் திரட்டி வருவதாக அவர் மேலும் கூறினார்.

# அஜித் மன்னப்பெரும ஜெயலத்தின் இடத்திற்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் டொக்டர் ஜயலத் ஜயவர்தனவின் வெற்றிடத்திற்கு மேல் மாகாண சபை உறுப்பினரும் கம்பஹா மாவட்டத்தின் முன்னாள் மேயருமான அஜித் மன்னப்பெரும நியமிக்கப்படுவார் என ஐ.தே.க. தகவல்கள் தெரிவிக்கின்றன.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட முடிவுகளின்படி ஐ.தே.க.வின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பட்டியலில் மேல் மாகாண சபை உறுப்பினர் அஜித் மன்னப்பெரும அடுத்தபடியாக கூடிய விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார்.



முறை தவறி நடந்ததாக குற்றம் சாட்டப்படும் பேராசிரியர் ஒருவருக்கு எதிராக நேற்று யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் மாணவர்கள் ஒன்று திரண்டு போராட்டம் ஒன்றை நடத்தியபோது

# குடும்பஸ்தர் கை...

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த திங்களன்று நடைபெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய திருவிழாவுக்கு நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக இலண்டனில் இருந்து வருகை தந்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக அவரது உறவினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

தாங்கள் பயங்கரவாதப் புலனாய்வு பிரிவில் இருந்து வந்துள்ளதாகத் தெரி... அவர்கள் காலையில் வவு... வில் உள்ள தமது அலுவ... தில் வந்து சந்திக்கும... கூறியதற்கமைய இன்று கா... வவுனியாவுக்குச் சென்றபோ... அவரை மேல் விசாரணைக்க... உடனடியாகக் கொழும்புக்கு... கொண்டுசெல்வதாகவும் ... கிழமை வந்து அவரைப் ப... வையிடலாம் என்றும் கூறியத... அவரது உறவினர்கள் தெ... வித்துள்ளனர்.

# பூநகரி சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரிப் பிரதச செயலர் பிரிவில் சமுர்த்தி வங்கிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

2.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இவ்வங்கி கட்டடத்திற்கான அடிக்கல்லை ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பூநகரி பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார், பூநகரி பிரதேச சபைத் தவிசாளர் ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் நாட்டிவைத்தனர்.

இந்நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். 2 மாத காலப் பகுதிக்குள் இக் கட்டடப்பணிகள் முடிவுபெறும் வகையில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (29)


**ENGLISH THE EASY WAY**

Modern 5 Way Approach to English Language Learning

இலகுவழி ஆங்கில கற்கைநெறி

By: S.Muththulingam

சனி, ஞாயிறு காலை 9.00 - 11.00

செவ், வியா மாலை 3.00 - 5.00

இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்

153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

☎ 021 222 0011

முதல் வகுப்பு இலவசம்

(G2799)


# திருப்தியான மருத்துவ சேவை போதனா வைத்தியசாலையில் கிடைக்குமா?

(யாழ்ப்பாணம்)

நோயாளர்களைப் பார்வையிடுவதில் வைத்தியர் ஒருவர் அசமந்தப்போக்குடன் செயற்படுவதாக நோயாளர்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிலேயே இவ்வாறு அசமந்தமான போக்கு இடம்பெறுகிறது.

நேற்று நண்பகல் வெளிநோயாளர் பிரிவிற்கு ஒவ்வாமையால் ஏற்பட்ட காயம், அதனால் ஏற்பட்ட வீக்கம் குறித்து மருந்து எடுக்கச்சென்ற ஒருவருக்கு 20 விநாடிகளில் 2 விதமான குளிசைகளை எழுதிக் கொடுத்துள்ளார் ஒரு பெண் வைத்தியர்.

இவ் விடயம் குறித்து ஒரு வினாகூட நோயாளியிடம் கேட்கப்படவில்லை. வைத்திய தர்மத்தின் அடிநாதமான நோயாளியுடன் அன்பாகப் பேசிக் கொள்ளும் தன்மை முற்று முழுதாக காணப்படவில்லை. படிக்காத, பாமர மக்கள் அதிகம் தமது நோயக்குத் தீர்வு காண இங்கு வருகின்றனர். இவர்களுக்கான சேவையா இது எனப் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இவ்வைத்தியர் குறித்து வைத்திசாலை ஊழியர்கள் கூட கவலை வெளியிட்டனர். இவ்வாறான வைத்தியர்களின் அசமந்தபோக்கினால் ஏ... னையோ நோயாளர்கள் பா... கப்படுகின்றனர். இதே ஒ... வாமை காயத்திற்கு இ... வெளிநோயாளர் பகு... வைத்தியர் ஒருவர் நேற்... மாலை மருந்து கொடுத்தமை... நல்ல வைத்திய ஆலோசன... யும், தொல்புரை வெளி பு... மருந்து, கிளிசை என்பன வ... கினார். இவ்வாறான வைத்... சேவையினை வழங்காது சி... வைத்தியர்கள் அசமந்தப... போக்காக இருப்பது வேதனை... யளிக்கிறது.

இது குறித்து வைத்திய... சாலை நிர்வாகம் கவனம் எடுக்... கவேண்டும் என்பதே மக்களின... விருப்பாகும். (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அர்புதன் அச்சகத்தில் 2013 மே 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.